Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 28, 2021

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 28, 2021 | ஒளி: 07 கதிர்: 112 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## சிசுவுக்கு அடையாள அட்டை இலக்கம்



இலங்கையில் சிசுக்கள் பிறந்தவுடனேயே அவர்களுக்கான அடையாள அட்டை இலக்கத்தை வழங்குவது அவசியம் என, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# பாற்பண்ணைகளை காங்கிரஸ் ஏற்காது

### மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதிக்கு செந்தில் கடிதம்



பெருந்தோட்டக் காணிகளில் பாற்பண்ணைகளை அமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை, ஒரு தொழிற்சங்கமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாதென ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளேன் என இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்து, பாற்பண்ணைகளை அமைக்க உகந்த இடங்களை அடையாளம் கண்டு, இத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதுடன், குறித்த அரச பெருந்தோட்டங்களில், மீள் தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்கவும் நடவடிக்கையெடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.


அவர், ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலே இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்.

பெருந்தோட்டக்காணிகளை அரசாங்கம் தனியாருக்கு வழங்குவது தொடர்பில் இ.தொ.கா மௌனம் சாதித்து வருவதாக எதிர்தரப்பினரால் குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். இ.தொ.கா ஆரம்பகாலம் முதல் இன்று வரை மலையக மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதிலேயே அக்கறை காட்டிவந்துள்ளது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## காளியின் கழுத்தில் 'கத்தரி'; முடி திருத்துனர் சிக்கினார்

**அஜித்லால் சாந்த உதய**



இரத்தினபுரி, மஹவலவத்த சிவன் கோவிலிலுள்ள காளி சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்களை கொள்ளையிட்ட நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்துக்கு அமைய, குறித்த நகைகள் நகை அடகு பிடிக்கும் நிலையமொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## 40 தொழிற்சங்கள் 4 மணிநேரம் நாடு முழுவதும் போராட்டம்

பல கோரிக்கையை முன்வைத்து, சுகாதார தொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில், போராட்டங்களை நேற்று (27) முன்னெடுத்திருந்தன.

தொடர்ச்சி P2



# தடுப்பூசியே இறுதி ஆயுதம்

தொற்றிலிருந்து மீள்வதற்கு தடுப்பூசி ஏற்றல் மிகவும் தீர்மானம் மிக்கதொரு காரணி எனத் தெரிவித்துள்ள கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் சமூக வைத்திய விஞ்ஞான பேராசிரியர் மஞ்சு வீரசிங்க, தொற்றிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புக் கிடைக்குமானால், நாட்டு மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை உயர் நிலையில் வைத்திருக்க முடியும் என்றார்.

தொடர்ச்சி P2

## 7,000 கர்ப்பிணிகளுக்கு கொரோனா தொற்று



இலங்கையில் இதுவரை 7,000 கர்ப்பிணிகள், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், 55 பேர் உயிரிழந்துள்ளனர் என குடும்ப சுகாதாரப் பிரிவின் பணிப்பாளரும் சமூக மருத்துவ நிபுணருமான வைத்தியர் சித்ரமாலி டீ சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### கொரோனா மரணங்கள் அதிகரிக்க

## நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் முக்கிய காரணிகளாகும்



கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களில் 80 சதவீதமானோர் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் ஆகிய நோய்களுக்கு உள்ளானவர்கள் எனத் தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு, இவையிரண்டு நோய்களும், கொரோனா மரணங்களுக்கு முக்கிய காரணிகளாகும் எனத் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## கேட்க நினைப்பதைக் கேளுங்கள்

ஆம் பக்கத்தில் கட்டுரை P3




### மருதனார்மடம் வாள்வெட்டு

## ஐவருக்கும் ஆறுவரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மருதனார்மடம் சந்தியில் பழக்கடை வியாபாரி ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஐவரையும் எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தாமதிக்கவில்லை; காத்திருக்கிறோம்



சிறைச்சாலைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தாமதிக்கிறது என்ற குற்றச்சாட்டை மறுத்து, அதன் பொதுச் செயலாளர் சாஹர காரியவசம், விசாரணை அறிக்கை கிடைக்கும் வரையிலும் காத்திருக்கின்றோம் என்றார்.

தொடர்ச்சி P2



## ஆணையாளரால் 2 இலட்சம் பேரின் பிள்ளைகள் பட்டினி

கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் சிலர், நகர சபையின் ஆணையாளருக்கு எதிராக சத்தியாகிரகப் போராட்டத்தில், மாநகர சபையின் முன்றலில் நேற்று (27) ஈடுபட்டனர். தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டதன் காரணமாக, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உலருணவுப் பொருள்களை வழங்குவதற்கு ஆணையாளர் தாமதப்படுத்துகின்றார். இதனால், வரிப்பணம் செலுத்தும் இரண்டு இலட்சம் பேரின் பிள்ளைகள் பட்டிணியில் வாடுகின்றனர் எனச் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர். (படம்: பிரதீப் பத்திரண)

## காணிகளை பதிவு செய்யவும்

கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் காணப்படும் பதிவு செய்யப்படாத தனியார் காணிகளை பதிவு செய்யுமாறு கொழும்பு மாநகர ஆணையாளர் சட்டத்தரணி ரோஷினி திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## அழகை ரசிக்கும் ஆத்மார்த்த அனுபவத்தை பருக வாருங்கள்

### சுற்றுலாப் பயணிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு



இலங்கையின் அழகை ரசிக்கும் ஆத்மார்த்த அனுபவத்தைப் பருக உலக சுற்றுலாப் பயணிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளதோடு, உலக சுற்றுலாப் பயணிகளின் கவனம் இலங்கையை நோக்கி தற்போது அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### நாய்க்கடியால் வருடத்துக்கு

## 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிப்பு

இலங்கையில் வருடமொன்றுக்கு 3 இலட்சம் முதல் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரையில், நாய்கள் கடிப்பதால் பாதிக்கப்பட்டு, வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர். 20 தொடக்கம் 30 ஆயிரம் வரையிலானோர் நீர்வெறுப்பு நோயால் பாதிக்கப்படுகின்றனர். நீர்வெறுப்பு நோயை (விசர் நாய்க்கடி) கட்டுப்படுத்துவதற்காக வருடமொன்றுக்கு 600 மில்லியனுக்கும் அதிகமாக அரசாங்கத்தால் செலவிடப்படுகின்றது.

தொடர்ச்சி P2



## தரகு பணத்துக்காக விற்றுவிட்டனர்

எம்.சி.சி ஒப்பந்தத்தினூடாக நாட்டுக்கு நிவாரணமாக கிடைக்கவிருந்த அமெரிக்க டொலர்களை வேண்டாம் என கூறியவர்கள், கெரவலப்பிடிய மின் உற்பத்தி நிலையத்தை விற்பனை செய்து, அதிலிருந்து நேரடியாக அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார

தொடர்ச்சி P2

## 2022 இல் தேர்தல்கள் வேண்டும்



மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை காலம்தாழ்த்தாது அடுத்த வருடம் நடத்த வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பாற்பண்ணைகளை காங்கிரஸ் ஏற்காது

பெருந்தோட்டக்காணிகளை அரசாங்கம் தனியாருக்கு வழங்குவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்பதை, குறித்த அமைச்சரவைத் தீர்மானத்துக்கு ஒப்புதல் வழங்கிய மறுநாளே பெருந்தோட்டத்துறை அமைச்சருக்கு நேரடியாகத் தொடர்புகொண்டு, எதிர்ப்புத் தெரிவித்துள்ளேன். இ.தொ.கா அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக உள்ள போதிலும், மலையக மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு முடிவுக்கும் ஆதரவளிக்காது என்பதை தெளிவாக சுட்டிகாட்டியுள்ளேன்.

ஜேஈடிபி அரச கம்பனிக்கு சொந்தமான 1,161 ஹெக்டேயர் காணியை, பாற்பண்ணை அமைக்க கடந்த செப்டெம்பர் 6ஆம் திகதி எடுக்கப்பட்ட முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷக்கு உத்தியோகபூர்வமாக கடிதத்தையும் எழுதியுள்ளேன்.

இந்தக் காணிகளில் மீண்டும் தேயிலை உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம், 1,161 ஹெக்டேயர் காணியில் வருடத்திற்கு சுமார் 34 இலட்சத்து 83 ஆயிரம் கிலோகிராம் பச்சை கொழுந்தை உற்பத்தி செய்ய முடியும். அதில் 7 இலட்சத்து 60 ஆயிரம் கிலோகிராமை தேயிலைத் தூளாக உற்பத்தி செய்ய முடியும். தற்போதைய விலையின் பிரகாரம் ஒரு கிலோக்கு 570 என்ற பெறுமதியை கணக்கிட்டால், 10 சதவீதம் தேயிலை கழிவு போக 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டுக்கு வருவாயாக ஈட்ட முடியும். 800 தொழிலாளர்களுக்கு 240 நாள்கள் வருடத்திற்கு வேலை வாய்ப்பையும் வழங்க முடியும்.

பாற்பண்ணை அமைக்கும் திட்டங்கள், மேற்படி காணிகளில் கொண்டுவரப்படும் பட்சத்தில் இதன் பாதிப்பு மலையகத்திற்கு மாத்திரமல்ல, இலங்கை தேயிலை உற்பத்தியில் ஈட்டப்படும் பொருளாதாரத்திற்கும் ஏற்படும்.

பாற்பண்ணை திட்டங்கள் நாட்டுக்கு அவசியமாகும். ஆனால், அதற்கு ஏற்கெனவே அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்ட பாற்பண்ணை அமைக்க உகந்த இடங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், விவசாயம் செய்யப்படாத தரிசு நிலங்களில் பாற்பண்ணைகளை உருவாக்கும் பட்சத்தில் தேயிலைத் தோட்டங்களும் வளர்ச்சியடையும் பாற்பண்ணைகளும் வளர்ச்சியடையும் என்பதை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இ.தொ.கா சார்பாக, நான் வலியுறுத்தியுள்ளதுடன், அமைச்சரவைத் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

அது மாத்திரமின்றி, அடையாளம் காணப்பட்ட காணிகளில் மக்களின் வாழ்வாதாரங்களும் உள்ளன. குறிப்பாக, லயன் அறைகள், கோவில்கள், பாதைகள், மைதானங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், பொதுவான இடங்கள் என அனைத்தையும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் பட்சத்தில், மக்களின் உரிமைகளும் தனியார் நிறுவனங்களின் கைகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புள்ளது.

தேயிலை தோட்டங்களும் வளர்ச்சியடைய வேண்டும் என்பதுடன், பால் பண்ணைகளும் வளர்ச்சியடைய வேண்டும். அதன் காரணமாக இத்திட்டத்திற்கு மாற்று இடங்களை வழங்குவது காலத்துக்கு ஏற்ற தீர்வாக இருக்கும். இ.தொ.காவின் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றுமென்று நம்புகிறேன் என்றும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## காளியின் கழுத்தில் 'கத்தரி'; முடி திருத்துனர் சிக்கினார்

கோவிலிலுள்ள காளி சிலையிலிருந்து நகைகள் காணாமல் போயுள்ளதாக இந்த மாதம் 17ஆம் திகதி இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதற்கமைய, சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்த கைரேகைகள், ஏனைய சாட்சிகளைக் கொண்டு 3 பிரிவுகளாகப் பிரிந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில், இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகன பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், நிவித்திகல நகரிலுள்ள அடகு நிலையத்தில் சில தங்க ஆபரணங்களை அடகு வைத்துள்ளார் என பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, இரண்டு பிள்ளைகளின் தந்தையான 39 வயதுடைய முடி திருத்துனராக தொழில் செய்யும் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கொரோனா தொற்றால் தமக்கு தொழில் இழக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தான் தொடர்ச்சியாக நிவித்திகல பிரதேசத்திலுள்ள 7 கோவில்களிலுள்ள சிலைகளின் தங்க ஆபரணங்களை திருடியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் குறித்த முடி திருத்துனர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட நகைகளை நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 40 தொழிற்சங்கள் 4 மணிநேரம் நாடுமுழுவதும் போராட்டம்

இந்த போராட்டத்தால், நான்கு மணிநேரம் வைத்தியசாலைகள் ஓரளவுக்கு ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இடைநிறுத்தப்பட்ட கொவிட் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுதல் அதில் பிரதான கோரிக்கையாகும் என ஒன்றியத்தின் இணை ஏற்பாட்டாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்திருந்தார்.

நேற்றுக்காலை 07 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டம் நண்பகல் 12 மணி வரை முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர், போராட்டம் கைவிடப்பட்டது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் தாதியர்கள் உள்ளிட்ட 40 சுகாதார தொழிற்சங்கள் பங்கேற்றிருந்தன என சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

( படம்: நிந்தவூர் மருத்துவமனையில் ஒன்றிணைந்த சுகாதார ஊழியர்களின் கவனயீர்ப்பு போராட்டம்: ( நூருல் ஹுதா உமர்)

## ஐவருக்கும் ஆறுவரை விளக்கமறியல்

யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதனார்மடம் சந்தியில் பழக்கடை நடத்தும் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் மீது கடந்த முதலாம் திகதி வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், சந்தேகத்தின் பேரில் ஐவரைக் கைது செய்து விசாரித்தனர். அவர்களிடமிருந்து 3 வாள்கள், மோட்டார்சைக்கிள், அலைபேசிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (26) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, அவர்களை எதிர்வரும் 06ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே, யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்கள் சிலவற்றை நாட்டிலிருந்து தப்பித்து, இந்தியாவுக்கு சென்ற சிலரே வழிநடத்துவதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சிசுவுக்கு அடையாள அட்டை...

சிறுவர் உரிமை மற்றும் சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த யோசனையை முன்வைப்பதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கும் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

குழந்தைகளுக்கான கொரோனா தடுப்பூசியை வழங்குவது தொடர்பாக சுகாதார சேவை பணிப்பாளர் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப குழு கூட்டத்திலேயே இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்தும் குழந்தைகளுக்காக அடையாள அட்டை இலக்கமொன்று இன்மை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன் குடும்ப சுகாதார பிரிவு இதற்கு முன்னர் குழந்தைகள் பிறந்தவுடனேயே அவர்களுக்கு அடையாள அட்டை இலக்கத்தை வழங்குவது தொடர்பில் முன்வைத்த யோசனையும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# தடுப்பூசியே இறுதி ஆயுதம்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தடுப்பூசியே தொற்றைத் தடுப்பதற்கான இறுதி ஆயுதம் என தெரிவித்த அவர், தொற்று நோய்க்கு தடுப்பூசி செலுத்தும் முறை இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டல்ல. மாறாக 1853ஆம் ஆண்டிலேயே பிரித்தானிய பாராளுமன்றத்தில் தடுப்பூசி தொடர்பான சட்டம் கொண்டு வரப்பட்டது. .

இந்தத் தடுப்பூசி செயலற்றது என்றும் இதில் விஷம் கலந்த மருந்துப்பொருள்கள் அடங்கியிருக்கலாம் என்றும் இது மேற்கத்தேயவர்களின் செயற்பாடு என்றும் சிலர் சமூக வலைத்தளங்களில் சில தகவல்களை பரப்ப நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்றார்.

தற்போது 60 மற்றும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களின் நோயெதிர்ப்பு சக்தி அதிகரித்துள்ளதுடன், இவர்களின் இறப்பு வீதமும் குறைவடைந்துள்ளது என்றார்.

மேலும், இலங்கையின் சனத்தொகையில் 20 - 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 2.5- 3 மில்லியன் பேர் வரை உள்ளனர். இவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை 3 வாரங்களாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், 4 இலட்சம் பேர் இதுவரை தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர் என்றார்.

மேலும் இந்த வயதுப் பிரிவினரிடையே வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்புகளுக்காக செல்வதற்கு உள்ள 20,000 பேர் வரை தடுப்பூசி செலுத்தியுள்ளதுடன், வெளிநாடுகளில் கற்றல் நடவடிக்கைகளுக்கு செல்லவுள்ள 17,000 மாணவர்களும் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என்றார்.

## தாமதிக்கவில்லை காத்திருக்கிறோம்

விசாரணை அறிக்கை கிடைத்ததன் பின்னரே, நடவடிக்கைகளை எடுக்கமுடியும் என்றார்.

அநுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து கைத்துப்பாக்கியை தலையில் வைத்து, சப்பாத்துகளை நக்கசொன்னமை, வெலிக்கடை சிறைச்சாலையில் தூக்குமேடையை நள்ளிரவு சென்று பார்த்தமை ஆகியன, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளாகும்.

இவ்விரு சம்பவங்களின் போதும், அவர், தனது சகாக்களுடன் மதுபோதையில் இருந்துள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் விசாரணைகள் நிறைவடையும் வரையிலும், லொஹான் ரத்வத்த வகிக்கும் சகல பதவிகளில் இருந்தும் அவரை நீக்கிவிடவேண்டுமென பல அமைப்புகளும் அரசாங்கத்துக்கு அழுத்தங்களை கொடுத்துவந்தன.

இதேவேளை, ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீபதி குசலா சரோஜினி வீரவர்தனவின் தலைமையில், ஐவரடங்கிய விசாரணைக் குழுவை நீதியமைச்சர் அலி சப்ரி நியமித்தார்.

லொஹான் ரத்வத்த, வெலிக்கடை சிறைக்கு 12 ஆம் திகதியும் அநுராதபுரம் சிறைக்கு 6 ஆம் திகதியும் சென்றிருந்தார். கடுமையான அழுத்தங்களுக்கு பின்னர், சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் பதவியை அவர், 15 ஆம் திகதியன்று இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அழகை ரசிக்கும் ஆத்மார்த்த அனுபவத்தைப் பருக வாருங்கள்

உலக சுற்றுலா தினமான நேற்று (27) ஜனாதிபதி இவ்வாறு அழைப்பு விடுத்திருந்ததோடு, பண்டைய காலம் தொடக்கம் இன்றுவரை, இலங்கையானது - வரலாறு, பாரம்பரியம், சுற்றுச்சூழல் மற்றும் சிறந்த காலநிலைகளைக் கொண்டதான சுற்றுலாத் தீவாக இருந்து வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையானது, நாட்டுக்குப் பல்வேறு சேவைகளை வழங்குவதன் மூலம் பெரும் அந்நியச் செலவாணியை வாரி வழங்குகினாலும், கொவிட்-19 தொற்று காரணமாக அது பாரியளவில் இப்போது செயற்படாமல் இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

எனினும், உலகில் பல நாடுகள் பயணங்களுக்கான அனுமதியை வழங்கி வரும் இவ்வேளையில், உலகச் சுற்றுலாப் பயணிகளின் கவனம் இலங்கையை நோக்கி தற்போது அதிகரித்துள்ளது.

எனவே, இலங்கையின் சுற்றுலாத் துறையை மீண்டும் வளர்த்தெடுப்பதற்காக அரசாங்கம் தனிமைப்படுத்தல் விதிகளின்படி அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## தரகு பணத்துக்காக விற்றுவிட்டனர்

நிவாரணத் தொகையாக டொலர் கிடைத்திருந்தால் அதில் தரகு பணம் கிடைக்காது என்பதால் அதனை நிராகரித்துவிட்டு, நாட்டின் தேசிய சொத்துகளை விற்பனை செய்துவிட்டு தரகு பணங்களை பெற்றுக்கொள்கிறார்கள் எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற பிணைமுறிகள் கொடுக்கல் வாங்கலின்போது, 10 பில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. ஆனால், மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் பதவி வகித்த காலத்தில், இதுபோல நூறு மடங்கு நட்டம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிப்பு

1970களில் நீர்வெறுப்பு நோயால் மரணிப்போரின் எண்ணிக்கை வருடமொன்றுக்கு 350க்கும் 380க்கும் இடையில் இருந்தது. 2014 ஆம் ஆண்டளவில் ஆகவும் குறைவாக 19 மரணங்கள் பதிவாகின.

நீர்வெறுப்பு நோயை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்காக, பல்வேறான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாயொன்று பிறந்த 4-6 வாரங்களுக்கு இடையில் நீர்வெறுப்பு தடுப்பூசி வழங்கப்படுகின்றது. மூன்று மாதங்களுக்கு பின்னர் மற்றுமொரு தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

நீர்வெறுப்பு தடுப்பூசியை 70 சதவீதம் ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக இலங்கையிலிருந்து 2025 ஆம் ஆண்டளவில் நீர்வெறுப்பு நோயை முற்றாக இல்லாதொழிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு நீர்வெறுப்பு தினம் இன்றாகும் (28) இதனையொட்டி, எம்பிலிப்பிட்டியவில் தெரு நாய்களுக்கு நீர்வெறுப்பு தடுப்பூசி, கருத்தடை செய்தல், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவையால், நேற்று (27) முன்னெடுக்கப்பட்டது.

## 7,000 கர்ப்பிணிகளுக்கு கொரோனா தொற்று

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இலங்கையில் இதுவரை 90 சதவீதமான கர்ப்பிணிகள் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். கர்ப்பிணிகளுக்கான தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

இதுவரை 55 கர்ப்பிணிகள் தொற்றுக்குள்ளாகி மரணித்துள்ள நிலையில், அனைத்து மரணங்களும் இந்த வருடம் மே மாதத்தின் பின்னரே இடம்பெற்றுள்ளன.

அத்துடன் இவ்வாறு உயிரிழந்த அனைத்து கர்ப்பிணிகளும் எவ்வித தடுப்பூசியையும் பெறாதவர்கள் என்பதுடன், வரலாற்றின் முதற்றடவை அதிகளவு கர்ப்பிணிகள் உயிரிழந்துள்ளனர் என்றார்.

மேலும், சிறுவர்களுக்கு கொரோனா ஒழிப்பு தடுப்பூசியை வழங்குவது தொடர்பில், தொற்றா நோய் தொடர்பான குழு தொடர்ச்சியாக அவதானம் செலுத்தி வருவதுடன், சிறுவர்களிடையே தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்கள் குறித்து ஆராய்ந்த போது, பல நாள் நோய் வாய்ப்பட்டவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமையவே பல்வேறு நோய்தொற்றுக்கு உள்ளான சிறுவர்களுக்கு முதலில் தடுப்பூசி செலுத்த தீர்மானித்தோம் என்றார்.

## நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் முக்கிய காரணிகளாகும்

இதனிடையே, வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட கொரோனா நோயாளர்களில் 75,000 இற்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் கொவிட்-19 தொடர்பான இணைப்பு செயலணியின் பணிப்பாளர், வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, ஓட்டமாவடியில் இதுவரை 3,000 இற்கும் மேற்பட்ட கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## காணிகளைப் பதிவு செய்யவும்

சொத்தின் உரிமையை பாதுகாப்பதற்காக மாநகர சபையில் பதிவு செய்வது அவசியம் என அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு நகர பகுதியில் இன்னும் பதிவு செய்யப்படாமல் உள்ள சொத்துகள் பற்றிய தகவல்களை, கொழும்பு மாநகர சபையின் WWW.COLOMBO.MC.GOV.LK என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

## 2022 இல் தேர்தல்கள் வேண்டும்

நாட்டு மக்களின் நாடித்துடிப்புகளை நன்கறிய அடுத்த வருடம் நிச்சயமாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும், மக்கள் எந்தப் பக்கம் இருக்கிறார்கள் என்பதை அறிய, அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# கேட்க நினைப்பதைக் கேளுங்கள்

## இன்று (28) தகவல் அறியும் உரிமை தினம் அனுஷ்டிக்கப்படுகிறது



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

“பிள்ளைக்கு குறித்த பாடசாலையில் ஏன் அனுமதி கிடைக்கவில்லை; தான் வாழும் பிரதேசத்தில் குடிதண்ணீர் ஏன் வழங்கப்படவில்லை; பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, எவ்வாறு செலவு செய்யப்பட்டது; வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரரர் தெரிவு செய்யப்பட்ட முறை என்பதிலிருந்து, பயன்படுத்தப்பட்ட பொருள்களின் மாதிரிகளைப் பெற்று, தரத்தை உறுதி செய்வது வரை, மக்கள் தகவறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் நன்மையடைய முடியும்” என்கிறார் சட்டத்தணியும் வளவாளரும் சிவில் சமூகத்தின் சார்பில் தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளவருமான ஐங்கரன் குகதாசன். இவர், தகவல் அறியும் உரிமை குறித்து. தமிழ் மிரருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி இங்கு பிரசுரமாகிறது.

**கேள்வி:** தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்றால் என்ன? அது சர்வதேச ரீதியில் எவ்வாறு தடம் பதித்துள்ளது?

**பதில்:** சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 19, கருத்துகளைக் கொண்டிருப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரம் பற்றிக் கூறுகின்றது. இவ்வுரிமை, கருத்துகளைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரத்தையும் எவ்விதமான தடையுமின்றித் தகவல்களை நாடுவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் வழங்குவதற்குமான சுதந்திரத்தை உள்ளடக்கியது.

தகவல் அறியும் உரிமைச் சட்டமென்பது, அச்சுதந்திரத்தை உறுதிசெய்வதற்கான ஒழுங்குமுறைகளையும் கட்டமைப்புகளையும் குறித்துரைக்கிறது. இலங்கை அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலமாகத் தகவலறியும் உரிமை, அடிப்படை உரிமையாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. அவ்வுரிமையை மக்கள் அனுபவிப்பதை உறுதிசெய்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டமைந்தது தான், 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்.

உலகில், 128 நாடுகள், இதுவரை தகவலுக்கான உரிமைச் சட்டத்தை உருவாக்கியுள்ளன. தெற்காசியப் பிராந்தியத்தில் பூட்டான் மாத்திரமே இன்னும் தகவலறியும் சட்டத்தை உருவாக்கவில்லை. இலங்கையின் தகவலறியும் உரிமைச் சட்டம், உலகத் தரவரிசைப்படுத்தலில் நான்காம் இடத்தில் உள்ளது.

**கேள்வி:** இச்சட்டம், இலங்கையில் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றது?

**பதில்:** இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும், மக்கள் கோருகின்ற அரச நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்காகத் தகவல் அலுவலர்கள் நியமிக்கப்படவேண்டும் என இச்சட்டம் தேவைப்படுத்துகின்றது. மக்கள் வாய்மொழி மூலமாகவோ எழுத்து மூலமாகவோ தகவல்களைக் கோருகின்றபோது, அதனை வழங்கவேண்டிய கடப்பாட்டைத் தகவல் அலுவலர்கள் மீதும் அவர்கள் பணியாற்றுகின்ற அரச நிறுவனங்கள் மீதும் இச்சட்டம் திணிக்கின்றது.

இச்சட்டத்தின் மூலமாக, சுயாதீனமான தகவலறியும் உரிமை ஆணைக்குழு ஒன்றும் தாபிக்கப்பட்டுள்ளது. பகிரங்க அதிகாரசபைகள் கடமைகளை நிறைவேற்றுவதைக் கண்காணித்தல், அவை உரியவாறு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தல், மேன்முறையீடுகளை விசாரித்துத் தீர்மானித்தல் உட்பட்ட பலதரப்பட்ட கடமைகளை ஆணைக்குழு ஆற்றுகின்றது. தகவலுக்கான கோரிக்கைகள், சட்டத்துக்கு முரணாக மறுக்கப்படுகின்ற போது, அதற்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளையும் தகவலறியும் உரிமைச்சட்டம் குறித்துரைக்கின்றது.

தகவலறியும் உரிமைச் சட்டமானது, ஒப்பீட்டளவில் ஒரு புதிய சட்டமாகும். அதன் காரணமாக, இதனைப் பற்றிய தெளிவு, மக்களையும் அரச அதிகாரிகளையும் இன்னும் முழுமையாகச் சென்றடையவில்லை.

அதற்குப் பல காரணங்கள் உண்டு. மக்கள் மத்தியில் இதைப்பற்றிய விழிப்புணர்வு இல்லாமை; அரச நிறுவனங்களில் காலகாலமாக இருந்து வருகின்ற இரகசியம் பேணுகின்ற கலாசாரம்; வெறுமனே வாக்களிப்பதோடு நாட்டின் பரிபாலனத்தில் தங்களுடைய கடமை முடிந்துவிட்டதாகக் கருதுகின்ற மக்களின் மனோநிலை; அரச உத்தியோகத்தர்களின் அசமந்தப்போக்கு; வளப்பற்றாக்குறை என்பன இவற்றுள் சிலவாகும்.




**கேள்வி:** இச்சட்டத்துக்கு உட்பட்டு கோரப்படும் விடயங்கள் அனைத்தையும் அதிகாரிகள் வழங்குகின்றார்கள் என நீங்கள் கருதுகின்றீர்களா?

**பதில்:** நாட்டினது பாதுகாப்பு, பொதுநன்மை போன்ற நோக்கங்களுக்காக, மக்களின் தகவலறியும் உரிமையின் மீது, தகவலறியும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 5, எந்தச் சந்தர்ப்பங்களில் தகவலைப் பெற்றுக்கொற்வதற்கான கோரிக்கைகள், அரச நிறுவனங்களால் மறுக்கப்படலாம் எனக் குறித்துரைக்கின்றது.

தேசிய பாதுகாப்பு, பிராந்திய ஒத்துழைப்பு, நாட்டின் பொருளாதாரம், தனிநபரின் அந்தரங்கம், வியாபார இரகசியங்கள், தேர்தல்கள், பரீட்சைகள் சம்பந்தமான சில விடயங்கள் என்பன அவற்றுள் சிலவாகும். இவற்றைத் தவிர்ந்த அனைத்து தகவல்களும், இவ்வாறான விலக்களிப்புகள்கூட, குறித்த விலக்களிக்கப்பட்ட தகவலொன்றை வழங்குவதால் ஏற்படும் தீங்கைவிட, அத்தகவலை வெளிப்படுத்துவதால் ஏற்படுகின்ற பொது நன்மை, உயர்வானது என நிரூபிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வலிதற்றதாகும் (*Public Interest Override*).

ஆக, எச்சந்தர்ப்பத்திலும் வழங்கப்பட முடியாது என்று வரையறுக்கப்பட்ட தகவல்கள் எதுவும் இல்லை. ஆனால், நடைமுறையில் அவ்வாறு நிகழவில்லை. தகவலறியும் உரிமைச் சட்டம் விதித்துரைத்துள்ள நடைமுறைகள், உதாசீனம் செய்யப்படுகின்ற தன்மையைப் பரவலாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ளாத சந்தர்ப்பங்களும் கோரிக்கைகளை, குறிப்பாக நேரடியாகக் கையளிக்கப்படாத கோரிக்கைகளை, பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தாத சந்தர்ப்பங்களும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க அநாவசியமாகக் காலந்தாழ்த்துதல், பிரிவு 5இன் கீழான விலக்களிப்புகளை மிகவும் பரந்துபட்ட விதத்தில் பிரயோகித்தல், பூரணமற்ற தகவல்களை வழங்கல் போன்ற விடயங்கள், நாடு முழுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நியமனங்களின் காரணமாகவும் அரசியல்வாதிகளின் அதிகாரத் துஷ்பிரயோகத்தின் காரணமாக, சட்ட வரையறைக்கு அப்பாற்பட்ட விதத்தில், பல செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது. அச்செயற்பாடுகளுடன் தொடர்புடைய தகவல்கள் கோரப்படும் போது, தங்களையும் மேலதிகாரிகளையும் அவ்வாறு செய்வதற்கு அழுத்தம் கொடுத்தவர்களையும், சட்டத்தின் பிடியில் இருந்து பாதுகாத்துக்கொள்ளவும் அரச அதிகாரிகள் தகவல் கோரிக்கைகளை அலட்சியப்படுத்தியுள்ள சந்தர்ப்பங்கள் உண்டு.

ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபையிலும் குறைந்தபட்சம் ஒரு முழு-நேர தகவல் அலுவலராவது நியமிக்கப்பட வேண்டுமென்று தகவலறியும் உரிமைச் சட்டம் தேவைப்படுத்தினாலும், பல


ஐங்கரன் குகதாசன்

தகவல் அலுவலர்கள் வேறு பணிகளையும் ஆற்றுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. கோரப்படுகின்ற தகவல்களைத் திரட்டி, கோரப்படும் வடிவத்தில், கோரப்படுகின்ற மொழியில் வழங்குவதென்பது இலகுவான காரியமல்ல. அதற்குரிய வகையிலான ஆவணப்படுத்தலும் வளங்களும் பயிற்சியும் இல்லாத போது, தகவல் அலுவலர் தன்னுடைய கடமையை ஆற்றுவதில், பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

**கேள்வி:** கிராமப்புற மக்கள் மத்தியில், இன்னும் தெளிவில்லாத நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றதே?

**பதில்:** மக்கள் மத்தியில் இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு ஊடக அமைச்சுக்கும் தகவலறியும் உரிமை ஆணைக்குழுவுக்கும் உண்டு. ஊடகங்கள் தகவலறியும் உரிமைச் சட்டம் பற்றி வெளியிடுவதுடன் நிறுத்திக்கொள்ளாமல், மக்களை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் இச்சட்டத்தைப் பயன்படுத்தி, மக்கள் தங்களுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் எவ்வாறு தீர்த்துக்கொண்டனர் என்பதையும் விவரமாக வெளியிடவேண்டும்.

இச்சட்டத்தை மக்கள் எந்தளவுக்குப் பயன்படுத்துகின்றார்களோ, அந்தளவுக்கே அது உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படும். இச்சட்டம் பற்றிய

(தொடர்ச்சி ஐந்தாம் பக்கத்தில்)

---

# உங்கள் தகவல் அறியும் உரிமை பற்றி உங்களுக்குத் தெரியுமா?

## தகவல் அணுகல் என்பது ஓர் உரிமை.

### உலகளாவிய ரீதியில் தகவல் அணுகலுக்கான சர்வதேச தினத்தை குறிப்பிடுகின்றது.

தகவல் அறியும் உரிமை என்பது அரசு மற்றும் பொது அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான இறையாண்மை அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கான மக்களின் உரிமையாகும். 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக 2017 ஆம் ஆண்டு முதல் இலங்கை பிரஜைகளின் தகவல் அறியும் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

### பெருந்தொற்றுக்கு மத்தியில் பாடசாலைகளை மீள ஆரம்பிக்க அரசாங்கம் மேற்கொண்ட செலவு என்ன?

பெருந்தொற்றுக் காலத்தின் போது கல்விப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும், சுகாதார விதிமுறைகளின் கீழ் பரீட்சைகளை நடாத்துவதற்கும் அரசாங்கம் மேற்கொண்ட செலவீனத்தை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி பெறலாம்.

**தொற்றுநோயின் போது மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 2021 ஜனவரி இல் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட செலவீனம்.**

| மாகாண கல்வி திணைக்களம் | தேசிய பாடசாலைகளுக்கு ஒதுக்கிய நிதி | மாகாண பாடசாலைகளுக்கு ஒதுக்கிய நிதி | மொத்தமாக பாடசாலைகளுக்கு ஒதுக்கிய நிதி |
|---|---|---|---|
| கிழக்கு | - | - | 73,711,850.00 |
| வடக்கு | 1,585,500.00 | 56,125,700.00 | 57,711,200.00 |
| தென் | 6,699,610.00 | 70,898,540.00 | 77,598,150.00 |
| மேல் | - | - | 107,919,250.00 |
| வட மத்தி | - | - | 55,657,650.00 |
| வட மேல் | 3,000,000.00 | 76,912,500.00 | 79,912,500.00 |
| மத்திய | 7,389,050.00 | 96,683,270.00 | 104,072,320.00 |
| சப்ரகமுவ | 1,260,280.00 | 62,535,500.00 | 63,795,780.00 |
| ஊவா | - | - | 61,247,100.00 |
| மொத்தம் | 19,934,440.00 | 363,155,510.00 | 681,625,800.00 |

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து மேற்கண்ட தகவல்கள் பெறப்பட்டன.**

### கடினமான காலங்களில் பணப் பரிசுகள் பற்றிய போலி குறுஞ்செய்திகளுக்கு நீங்கள் ஆளாகியுள்ளீர்களா?

பணப் பரிசுகள் பற்றிய போலிச் செய்திகளால் எவ்வாறு ஏமாற்றப்படாமல் இருப்பது, இத்தகைய செய்திகளை அடையாளம் கண்டு மேலதிக நடவடிக்கைகளை எவ்வாறு எடுப்பது, போன்ற விடயங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவலுக்கான கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தவறான செய்திகள்**
**(Spam Messages)**

**(தகவல் SLCERT)**

2020 முதல் 2021 வரை இணையத்தில் பதிவான மோசடி நடவடிக்கைகள் குறித்து இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவிற்கு (SLCERT) கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பட்டியல்.

| Incident Type | No of Incidents |
|---|---|
| DDOS | 1 |
| Ransomware | 18 |
| Malicious Software Issue | 9 |
| Phone Hacking | 6 |
| Scams | 109 |
| Phishing | 15 |
| Website Compromise | 76 |
| Financial/Email Frauds | 55 |
| Intellectual Property Violation | 1 |
| Server Compromised | 1 |
| Social Media | 14284 |
| Other | 35 |

### உங்கள் குழந்தை உங்கள் வீட்டிற்கு வெளியே பாதுகாப்பாக இருக்கிறதா?


கடந்த நான்கு ஆண்டுகளில், வருடாந்தம் 8,000 க்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பெறப்பட்டுள்ளன . சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றிய கூடுதல் தகவலை பெற தகவலறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தலாம்.

**2016 முதல் 2020 வரை சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் பெறப்பட்ட தகவல்கள்**

**இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள்**

கடந்த 5 ஆண்டுகளில் பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 44,610 (2021 ஆம் ஆண்டின் முறைப்பாடுகள் சேர்க்கப்படவில்லை)

மன்னார் மாவட்டத்திலிருந்து குறைந்த எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன.




இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்,
96, கிருல வீதி, கொழும்பு 05.
தொலைபேசி: 0115353635
தொலைநகல்: 0115353500
மின்னஞ்சல்: info@slpi.lk / rti@slpi.lk
இணையதளம்: www.slpi.lk
எங்களை தொடர்பு கொள்ளவும்: 0703300700

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

சோழ மண்டலக்குளம் பகுதியில் விவசாயிகளுக்கு

# காணி வழங்க நடவடிக்கை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை சோழ மண்டலக்குளம் பகுதியில், கடந்த 25 ஆண்டுகளாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு முதலில் காணியை வழங்க வேண்டுமெனத் தெரிவித்த மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான், அதன் பின்னரே, ஏனைய விடயத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும், உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை, சோழமண்டலக் குளம் பகுதியில், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி, 250 ஏக்கர் வரை காணப்படுகின்றது.

இந்தக் காணியில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இலுப்பைக்கடவை - அந்தோனியார்புரம் பகுதியில் உள்ள 95 பேர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், அவர்களுக்கு குறித்த காணி உரிய முறையில் வழங்கப்படாமை குறித்து, மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன்,



அண்மையில், காணி அமைச்சரிடம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள கோரி அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்தார்.

இந்த நிலையில், குறித்த கோரிக்கைக்கு அமைவாக, நேற்றைய தினம் (27) காலை, மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில், வடமாகாண காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிமலன், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே.அரவிந்தராஜ், மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் உட்பட உரிய அதிகாரிகள், இலுப்பைக்கடவை - சோழ மண்டலக்குளம் பகுதியில் உள்ள குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டதோடு, விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

இதன் போது, அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக, 2016, 2017ஆம் ஆண்டுகளில், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணத்தைப் பெற்றுக் கொண்டவர்களும் தனி நபர்களும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், குறித்த பகுதியில், காணி துப்புரவு செய்திருந்த நிலையில், அவர்களின் துப்புரவு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும் கடந்த 25 ஆண்டுகளாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு முதலில் காணியை வழங்கிய பின்னரே, ஏனைய விடயத்தை முன்னெடுக்க வேண்டும் என, உரிய அதிகாரிகளுக்கு மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பணிப்புரை விடுத்தார்.

இதற்கமைவாக, துப்புரவு செய்தவர்களின் பணிகள் நிறுத்தப்பட்டு, 25 ஆண்டுகளாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு, காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கான மேலதிக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, மாந்தை மேற்கு பிரதேச செயலாளரிடம் அபிவிருத்திக் குழுவின் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.



## போராட்டத்துக்கு ஆதரவு...

நாடளாவிய ரீதியில் தாதியர் சங்கத்தினர், நேற்று (27), பணிப்புறக்கணிப்பை மேற்கொண்ட நிலையில், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், வடக்கில் உள்ள தாதியர்களும் வைத்தியசாலை சிற்றூழியர்களும், பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர். (படப்பிடிப்பு: செ. கீதாஞ்சன், க. அகரன், எஸ். தில்லைநாதன், எஸ். றொசேரியன் லெம்பேட்)

பொன்னாலையில்

## 2 வாள்கள் மீட்பு; ஒருவர் கைது

■ எஸ். நிதர்ஷன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பகுதியில், நேற்று (27) காலை, இரண்டு வாள்களுடன், சந்தேகநபர் ஒருவரை, விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

பொன்னாலை மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் இரண்டு வாள்கள் இருப்பதாக, யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், விசேட அதிரடிப்படையும் வட்டுக்கோட்டை பொலிஸாரும் இணைந்து குறித்த வீட்டை சுற்றி வளைத்தனர்.

இதன்போது, இரு வாள்கள் மீட்க்கப்பட்டதுடன், வாள்களைப் பாதுகாப்பாக வைத்திருந்த குறித்த



வீட்டின் உரிமையாளரையும் கைது செய்தனர். குறித்த சந்தேக நபருக்கு எதிராக வட்டுக்கோட்டை பொலிஸார், மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அல்வாயில் ரவுடிகள் அட்டகாசம்:

## குடிசைகள் தீக்கிரை; சொத்துகளுக்கும் சேதம்

■ எஸ் தில்லைநாதன்

வடமராட்சி, அல்வாய் பகுதியில், ரவுடி கும்பலால் இரண்டு குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன், சொத்துகளும் நாசம் செய்யப்பட்டுள்ளன.

அல்வாய் வடக்கு, மகாத்மா வீதியில், கடந்த 2ஆம் திகதியன்று, அப்பகுதியைச் சேர்ந்த ரவுடி கும்பலைச் சேர்ந்து ஒருவரால், அங்குள்ள வீடுகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த நபர், சனிக்கிழமை (25) மாலை பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதனை தொடர்ந்து, குறித்த நபரின் சகோதரர், சிலரை இணைத்துக் கொண்டு, சனிக்கிழமை (25) இரவு, குறித்த கிராமத்துக்குள் புகுந்து, அங்குள்ள குடிசைகளுக்கு தீ வைத்ததுடன், பல வீடுகள் மீது தாக்குதல் மேற்கொண்டு சொத்துகளுக்குச் சேதம் விளைவித்துள்ளார்.

இதன் காரணமாக அச்சமடைந்த அப்பகுதியைச் சேர்ந்த சிலர், அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறி உள்ளதாகவும் இதனால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.





## 136 கிராம சேவையாளர்களுடன் சந்திப்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில், கிராமத்துக்கு மூன்று மில்லியன் ரூபாய் திட்டம் தொடர்பில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 136 கிராம சேவையாளர்களுடனும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், நேற்று (27) சந்திப்புகளை நடத்தி, கலந்துரையாடியுள்ளார்.

துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வெலிஓயா ஆகிய பிரதேச செயலாளர் ஊடாக, கிராம சேவையாளர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, “இந்தத் திட்டத்துக்காக கிராமங்களில் இருந்து மக்களின் தேவைப்பாடுகளை மக்களே அடையாளப்படுத்த வேண்டும். இதில், கிராமத்துக்குரிய தேவை மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டும்.

முதற்கட்ட தேவை, இராண்டாம் கட்ட தேவை என தேவைகளை முன்மொழிவதன் ஊடாக, அடுத்த



ஆண்டில் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்திய அறிக்கையொன்றை கிராமங்களில் இருந்து தயாரிக்க வேண்டும்” என்று கோரப்பட்டுள்ளது.

பொத்துவில், வேகாமம் 450 ஏக்கர் விவசாய காணிகள்

# விரைவில் விடுவிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில், வேகாமம் 450 ஏக்கர் விவசாய காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.எம். முஸரப், நேற்று (27) தெரிவித்தார்.

பொத்துவில் - லாகுகல பிரதேசங்களுக்கு இடையிலான எல்லையிடல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளும் போது, பொத்துவில் பிரதேச வேகாமம் காணிப் பிரச்சினையை முதலாவதாகத் தீர்த்து வைக்க வேண்டுமென, வன ஜீவராசிகள் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதாக தெரிவித்தார்.

வேகாமம் பகுதியில் 1956களில் விவசாய செய்கைக்காக கொடுக்கப்பட்ட சுமார் 1,900



ஏக்கர் வரையிலான காணிகள் 2006ஆம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வனஜீவராசி திணைக்களத்துக்குரியதாக மாற்றப்பட்டிருந்தன.

அதன்பின்னர் இக்காணிகள் தொடர்பாக பல ஆய்வுகள் செய்யப்பட்டிருந்தன. அக்காணிகளில் ஏறத்தாழ 450 ஏக்கர் அளவில் விடுவிக்க முடியும் என்று கடந்த காலங்களில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு கூட பரிந்துரைகளை வழங்கியிருந்தன.

லாகுகல-பொத்துவில் எல்லை நிர்ணயம் குறித்து பொத்துவில், அம்பாறையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கமைய, வனஜீவராசிகள் அமைச்சிலிருந்து இந்த எல்லைகளை இடுவது தொடர்பாக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நில அளவை திணைக்களத்துக்கும் எல்லைகளை இடுவது சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும், இப்பணிகள், கொவிட் தொற்றுக் காரணமாக தாமதமாகின.




## சுற்றுலா தினத்தில்

உலக சுற்றுலா தினத்தையொட்டி, சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சும், இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த உலக சுற்றுலா தின வைபவம், பொத்துவில், அறுகம்பே புளூவே சுற்றுலா விடுதியில் நேற்று (27) நடைபெற்றது.

இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் ஏ.எம். ஜௌபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.எம். முஸரப் கலந்துகொண்டார்.

சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் பொருட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு ஊக்குவிப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(படம்: எம்.எஸ்.எம். ஹனீபா)

எதிர்க்கட்சித் தலைவரால்

## மருத்துவ உபகரணம் கையளிப்பு

■ வி.ரி.சகாதேவராஜா, ஏ.எல்.எம். ஷினாஸ், பைஷல் இஸ்மாயில், றியாஸ் ஆதம்

பொத்துவில் அரச வைத்தியசாலைக்கு 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, நேற்று (26) வழங்கினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கான இணைப்பாளர் வெள்ளையன் வினோகாந்தின் வேண்டுகோளுக்கமைவாக, இம்மருத்துவ உபகரணத் தொகுதி வழங்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில், ‘விபக்சயே உஸ்மக்’ (எதிர்க்கட்சியின் சுவாசம்) எனும் தொனிப்பொருளில், ஆரோக்கியமான நாட்டைக்



கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இவை வழங்கப்பட்டன.

இந்த வைத்திய உபகரணங்களை, பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் மொஹமட் றியாஸ்சிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கையளித்தார்.

மட்டு. பெரும்போக பயிர்ச்செய்கை:

## ஆரம்ப கூட்டங்களின் திகதி, நேரம் அறிவிப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக பயிர்ச்செய்கை தொடர்பான ஆரம்பக் கூட்டங்களை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கூட்டங்களுக்கான திகதிகளும் நேரங்களும் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக, மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேசத்துக்கான கூட்டம், கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில், நாளை (28) காலை 9.30 மணி தொடக்கம் 11 மணி வரை நடைபெறவுள்ளது.

போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கான கூட்டம், வெல்லாவெளி கலாசார மண்டபத்தில், நாளைக் காலை 11.30 தொடக்கம் பிற்பகல் 01 மணி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 29ஆம் திகதியன்று, மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான கூட்டம், வவுணதீவு பிரதேச செயலகத்தில் காலை 9.30 - 11.00 வரை நடைபெறவுள்ளதுடன், ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்கான கூட்டம், செங்கலடி பிரதேச செயலகத்தில் காலை 11.30 தொடக்கம் பிற்பகல் 1.00 வரை நடைபெறவுள்ளது.

கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப்பிரிவுக்கான கூட்டம், வாகரை பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை (30) காலை 10.00 தொடக்கம் பிற்பகல் 02 மணி வரையும் கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்கான கூட்டம், கிரான் றெஜி கலாசார மண்டபத்தில் அன்றையதினம் பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



## சுகாதார ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்கள், வைத்தியசாலைக்கு முன்னால் நேற்று (27) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு கொவிட் கால கட்டத்தில் கடந்த 6ஆம், 7ஆம், 8ஆம் மாதங்கள் வழங்கப்பட்ட 7,500 ரூபாய் கொடுப்பனவு, ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதியோடு நிறுத்தப்பட்டிருப்பதாகவும் நாட்டில் கொரோனா அச்சுறுத்தல், தடுப்பு நடவடிக்கைகள் இருக்கும் வரை இந்தக் கொடுப்பனவைத் தொடர்ந்து வழங்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன்,



மேலதிக நேரத்துக்கான கொடுப்பனவுகள், முறையான மேலங்கிகள், பாதுகாப்பான முகக்கவசம், கொவிட் விசேட சலுகைகள் எதுவும் வழங்கப்படாமல் கவனயீனமாக அரசாங்கம் செயற்படுவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இவற்றை தொடர்ந்து வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை



எடுக்க வேண்டுமென வலியுறுத்தி, பதாகைகளை ஏந்தியவாறு, சுகாதார விதிமுறைகளை பின்பற்றி, கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக, நேற்று (27) காலை 07 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் சேவைகள் தடைப்பட்டிருந்தன.

நிர்வாகங்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு

# தொழிற்சங்கங்களே வழிசமைத்தன

ஆ.ரமேஸ்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார தொழில், தொழில் உரிமைகள் உள்ளிட்ட நலன்புரி விடயங்களில், தோட்ட முகாமைத்துவ நிர்வாகங்கள் தான்தோன்றிதனமாக செயற்படுவதற்கும், தொழிலாளர்களை நசுக்குவதற்கும் வழிசமைத்துக் கொடுத்தது தொழிற்சங்கங்களே என பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் முன்னாள் தலைவர் வீ.புத்திரசிகாமணி சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று (27) காலை அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இன்றும், எதிர்வரும் காலத்திலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை பெருந்தோட்ட கம்பனிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டுமானால், கூட்டு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதுவே காலத்தின் கட்டாயம் என்பதை தொழிற்சங்கங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இன்று தொழிலாளர்களை வழிநடத்தும் தொழிற்சங்கங்களுக்கும் அதேபோல தோட்டங்களை முகாமைத்துவம் செய்யும் தோட்டக் கம்பனிகளுக்குமான தொடர்புகள் அற்றுபோயுள்ளன என்பது, தொழிலாளர்கள் அனுபவித்து வரும் சொல்லன்னா துயரங்களிலிருந்து தெரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

கூட்டு ஒப்பந்தம் இல்லாத காரணத்தாலும், தொழிற்சங்கங்களுக்கான சந்தா பிடிப்பு அற்றுப் போனதாலும்,



தொழிற்சங்கங்களுக்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் இடையிலான விரிசல் காணப்படுவதாலும் ஏற்பட்டுள்ள நிலையே இன்று தொழிலாளர்கள் பல்வேறு கெடுப்பிடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

ஆகையால் கூட்டு ஒப்பந்த நடைமுறை விடயம் தொடர்பில், தொழிற்சங்கங்கள் அறிவை மேலும் வளர்த்துக் கொண்டு, மீண்டும் ஒப்பந்த செயற்பாட்டுக்கு வரவேண்டும். இது மக்கள் நலன் கருதியே அமைய வேண்டும் என்பதை அனைவரும் உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மலையகத்திலும் தொடரும்

# வைத்தியசாலை பணியாளர்களின் பணிபகிஷ்கரிப்பு

பாலேந்திரன், எஸ். கணேசன், ரஞ்சித் ராஜபக்ஸ, சுமணசிறி குணதிலக, பாலித ஆரியவன்ஸ

பல அம்சக் கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து, நாடு முழுவதும் வைத்தியசாலை பணியாளர்கள் முன்னெடுத்து வரும் பணிபகிஷ்கரிப்புக்கு மலையகத்தின் பல வைத்தியசாலைகளிலும் ஒத்தழைப்பு வழங்கப்பட்டது.

இதற்கமைய, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதியர்கள், பிரதேச வைத்தியசாலை சிற்றூழியர்கள் நேற்று (27) காலை பணிபகிஷ்கரிப்பை முன்னெடுத்ததுடன், பகல் 12 மணி தொடக்கம் 1 மணி வரை இந்த பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.



அத்துடன், நாவலப்பிட்டி பொது வைத்தியசாலை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, மாத்தளை ஆகிய வைத்தியசாலை பணியாளர்களும் நேற்று (27) பகல் 12 மணி தொடக்கம் 1 மணிவரை தமது பணிபகிஷ்கரிப்பை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

கிளங்கன் வைத்தியசாலை கொரோனா பிரிவின் செயற்பாடுகள்

# சர்வமத வழிபாடுகளுடன் ஆரம்பம்

கே.சுந்தரலிங்கம்

டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகம் செலவில், அமைக்கப்பட்டுள்ள கொரோனா தொற்று சிகிச்சைப் பிரிவின் பணிகள், வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தரிந்த வீரசிங்க தலைமையில், சர்வமத வழிபாடுகளுடன் நேற்று (27) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. இதனைச் சமாளிப்பதற்காக வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தகர்கள், செலவந்தர்கள் உள்ளிட்டவர்களின் பங்களிப்புடன் குறித்த கொரோனா சிகிச்சை பிரிவு கட்டடம் சகல வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டது.

இந்தப் பிரிவு கடந்த காலங்களில் திறந்து வைக்கப்பட்ட போதிலும், இந்தப் பிரிவுக்கு கொரோனா நோயாளர்கள் மாற்றப்படவில்லை. இந்நிலையில் நேற்றுடன் இப்பிரிவின் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.





# கட்டடம் திறந்து வைப்பு

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய மயில்வாகனம் உதயகுமாரின் பிறந்த நாளை முன்னிட்டு, லிந்துலை என்போல், சென்ரேகூலஸ் தோட்டத்தில் அமைந்துள்ள 'வினோதயம' அறநெறிப் பாடசாலை கட்டடம் புதிதாக புனரமைப்பு செய்யப்பட்டு, மாணவர்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. (எம். கிருஸ்ணா)

## PAGE 3 தொடர்ச்சி

விழிப்புணர்வு இல்லாத சந்தர்ப்பத்தில், நாட்டில் இடம்பெறுகின்ற விடயங்கள் தொடர்பிலான மக்களின் புரிதல் மட்டுப்படுத்தப்படும். அது, ஜனநாயகத்தை நலிவடையச் செய்வதோடு இலஞ்சம், ஊழல் போன்ற சமூக விரோத செயற்பாடுகள் தலைவிரித்தாட வழிவகுக்கும். மக்கள் மத்தியில் இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுவதன் காரணமாக, அரச இயந்திரம் கடமையிலிருந்து தவறுகின்ற போது பொறுப்புக்கு உள்ளாக்குகின்ற தன்மை ஏற்படும்.

தகவலறியும் உரிமைச் சட்டம், அரச அதிகாரிகள் மத்தியில் உசார் நிலையை ஏற்படுத்தியுள்ளது. தங்களுடைய கடமைகளை, அவதானமாகவும் ஒழுங்குமுறையாகவும் ஆற்றுகின்ற தன்மை அதிகரித்துள்ளது. தகவலறியும் கோரிக்கை, எந்த விடயம் சம்பந்தமாகவும் எந்த நேரத்திலும் வரலாம் என்கின்ற சூழ்நிலையில், தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டிய தேவைப்பாட்டை இச் சட்டம் ஏற்படுத்தியுள்ளது.

இதுவே, காலப்போக்கில் நடைமுறையாகமாறி, பின்னர் எம்முடைய கலாசாரத்துக்குள் உள்வாங்கப்பட்டுவிடும். இதுவே, எம்முடைய அரச கட்டமைப்பையும் காலப்போக்கில் ஒட்டுமொத்த நாட்டையும் மறுசீரமைப்பதற்கு வழிவகுக்கும்.

தன்னுடைய பிள்ளைக்கு குறித்த பாடசாலையில் ஏன் அனுமதி கிடைக்கவில்லை என்கின்ற தனிப்பட்ட பிரச்சினையிலிருந்து,தான் வாழும் பிரதேசத்தில் குடிதண்ணீர் ஏன் வழங்கப்படவில்லை வரை, பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, எவ்வாறு செலவு செய்யப்பட்டது, வீதி புனரமைப்பில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட முறை, பயன்படுத்தப்பட்ட பொருள்களின் மாதிரிகளைப் பெற்று, தரத்தை உறுதி செய்வது வரை, மக்கள் தகவறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் நன்மையடைய முடியும்.

மக்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், தகவறியும் உரிமைச் சட்டம் வெறும் கருவியே. தகவலைப் பெற்றுக்கொள்வதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று எண்ணக்கூடாது. தகவலறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திப் பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில், மக்கள் தங்களுடையதும் தாங்கள் வாழுகின்ற சமுதாயத்தினுடையதும் நாட்டினுடையதும் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதுவே தகவலறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கம்.

கேள்வி: இந்த சட்டத்தைப் பயன்படுத்தி, இலங்கை மக்கள் உச்ச நன்மையடைதாயின் நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

பதில்: குறித்த தகவலொன்று விலக்களிப்புக்கு உட்பட்டதா என்கின்ற சந்தேகத்தில், பலர் கோரிக்கைகளை முன்வைப்பதில்லை. அது அவசியமற்றது; கேட்க நினைக்கின்ற அனைத்தையும் கேளுங்கள். தனிப்பட்ட தேவைகளுக்காக மட்டுமின்றி, சமூக நலனுக்காகவும் தகவல்களைக் கோருங்கள். கிடைக்கின்ற தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். தகவல்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் அந்நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களையும் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கு உள்ளாக்குங்கள்.

முன்வைத்த கோரிக்கை தொடர்பில் பதிலேதும் கிடைக்காத போதோ, கோரிக்கை மறுக்கப்படுகின்ற போதோ சலிப்படையாதீர்கள்; மேன்முறையீடு செய்யுங்கள். அரச நிறுவனங்களின் மீது தொடர்ச்சியாக அழுத்தம் செலுத்துங்கள். அரச நிறுவனங்களிலுள்ள தகவல்கள் உங்களுக்குச் சொந்தமானவை. அரச நிறுவனங்களும் அவற்றின் அதிகாரிகளும் வெறும் பாதுகாவலர்கள் மட்டுமே!

சுகாதார தரப்பினருக்கான மேலதிக கொடுப்பனவு

# தமக்கும் வேண்டும்

## ஸ்ரீ லங்கா சுதந்திர சுகாதார சேவை சங்கம் கோரிக்கை

இந்திக அருணகுமார

கொரோனா தொற்று காரணமாக, சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் 7,500 ரூபாய் விசேட கொடுப்பனவை தமக்கும் வழங்க வேண்டுமென வலியுறுத்தி, நேற்றிலிருந்து (27) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திர சுகாதார சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்று, மத்திய மாகாண ஆளுநர் லலித்.யூ.கமகேவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் வீ.ஜி.சிறில் ஆனந்த தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில் உள்ள சகல ஆயுர்வேத வைத்தியசாலை பணியாளர் குழுவும் இதனுடன் இணைந்துக்கொள்வதாகவும், தமது பணிபகிஷ்கரிப்பால் நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்பு கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டங்களைக் கொண்டு வந்தாலும்

# வர்த்தக மாபியாக்களை கட்டுப்படுத்த முடியாது

## இராதா எம்.பி தெரிவிப்பு

எஸ்.கணேசன்

சட்டங்களை கொண்டு வந்தாலும் வர்த்தக மாபியாக்களை கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே தற்போதைய அரசாங்கம் காணப்படுகின்றது. இதனால் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

"நாட்டில் இன்று பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. கொரோனா மற்றும் டொலர் தட்டுப்பாட்டால் மட்டும் இந்நிலைமை ஏற்படவில்லை. அமைச்சுகளில்



இடம்பெறும் ஊழல்களும் இதற்குப் பிரதான காரணமாகும். சீனி, எண்ணைய், வெள்ளைப்பூடு என எல்லாவற்றிலும் ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன. அதேபோல வர்த்தக மாபியாக்களை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் சட்டங்களை கொண்டுவந்தாலும் அவை அமலுக்குவருவதை காணமுடியவில்லை. வர்த்தக மாபியாக்கள் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதால் பொதுமக்களுக்கே பாதிப்பு ஏற்படுகின்றது என்றார்.

மலையகத்தில் கடும் மழை

# பல இடங்களில் மண்சரிவு அபாயம்

கே.சுந்தரலிங்கம்

மலையகத்தில் கடந்த சில தினங்களாக நிலவும் மழையுடனான வானிலையால், பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால், ஹட்டன் -கொழும்பு, ஹட்டன்- நுவரெலியா வீதிகளின் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்று (27) காலை ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியின் ஸ்ரதன் பகுதியில் மண்திட்டுடன் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததன் காரணமாக, சில மணித்தியாலங்கள் போக்குவரத்து தடைப்பட்டன.

இதனையடுத்து, வீதி போக்குவரத்து அதிகார சபையினர், பிரதேசவாசிகள், பொலிஸார் இணைந்து, மரத்தை வெட்டி அகற்றியதைத் தொடர்ந்து போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், குறித்த வீதிகளில் மண்சரிவு எச்சரிக்கை ஏற்படும் அபாயம் காணப்படுவதால், இந்த வீதிகளைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கினிகத்தேனை, நோட்டன்பிரிட்ஜ், வட்டவளை, ஹட்டன் ஆகிய பொலிஸ் பிரிவுகளிலுள்ள பிரதேசங்களில் கடுமையாக காற்று வீசுவதால், மரங்கள் முறிந்து மின்கம்பங்கள் மீது விழுந்துள்ளதால், குறித்த பகுதிகளுக்கு அடிக்கடி மின் தடை ஏற்பட்டுள்ளது.



# முகக்கவசம் மட்டும் அணிந்தால் போதாது; விழிப்பாகவும் இருக்கவும்

சிறிய சதவீதத்தினரைத் தவிர, பெரும்பாலானவர்கள் சுகாதார வழிகாட்டல்களை முறையாகக் கடைப்பிடித்து வருவதை அவதானிக்க முடிகிறது. கடைப்பிடிக்காதவர்களும் கடைப்பிடிக்க வேண்டும். முறையாகக் கடைப்பிடிப்பவர்கள், அவற்றைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

ஒக்டோபர் 1ஆம் திகதிக்குப் பின்னர், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுமென விடுக்கப்படும் அறிவிப்புகளால், பலரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அன்றாடம் கூலி வேலைக்குச் செல்வோருக்கு, இவ்வறிப்பு பெறுமதிப்பானது. மூடிக்கிடக்கும் வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட நிறுவனங்கள் பல திறக்கப்படவே வேண்டும்.

அங்கெல்லாம் சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றவேண்டும். சில இடங்களில் ஆட்குறைப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக அறியமுடிகின்றது. அவ்வாறாயின், கடமைக்குத் திரும்புவோர், இரண்டுமடங்கு வேலை செய்யவேண்டும். அதற்கேற்றவாறு ஊதியம் அதிகரித்துக் கொடுக்கப்படுமா, அல்லது இரட்டிப்பு வேலை மட்டுமா என்பதெல்லாம், ஒவ்வொரு நிறுவனங்களைப் பொறுத்தே அமையும்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் இருப்பதால், பலரும் தங்களுடைய வருமானங்கள், மேலதிக வருமானங்களை இழந்தே நிற்கின்றனர். இன்னும் சில துறைகளைச் சார்ந்தவர்களுக்கு, 'கொரோனா' அள்ளிக்கொடுத்துள்ளது என்றாலும் தவறில்லை. சில துறைகளைக் கட்டியெழுப்புவது, கடினமான காரியமாகவே அமையும். ஆனால், முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமே இல்லை.

இதற்கிடையில், திருட்டுச் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்வதை அவதானிக்க முடிகிறது. வழமையாகவே திருட்டுத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு அப்பால், புதிய திருடர்களும் கைவரிசையைக் காண்பித்து வருகின்றனர். இன்னும் சிலர், சிக்கிக்கொள்கின்றனர்.

வீட்டுக்குள் களவாக நுழைந்து, திருடிச் செல்வதுடன் வீதிகளில் பயணிப்போரின் தங்க நகைகளை அபகரிக்கும் செயல்களும் வெகுவாக அதிகரித்துள்ளன. ஆகையால், வீட்டிலிருந்து வெளியேறும் போது, முகக்கவசம் அணிவது எவ்வளவு கட்டாயமோ, அதேபோல, வழிபறிக் கொள்ளையர்களின் கண்களை உறுத்தும் வகையில், நகைகளை அணிந்து செல்லாமல் இருப்பதும் நல்லது.

நகைகள் மட்டுமன்றி, வீதியோரங்களில் நிறுத்திவைக்கப்படும் ஓட்டோக்கள் பல காணாமல் போயுள்ளன. இன்னும் சில ஓட்டோக்களின் பாகங்கள் கழற்றப்பட்டு, விற்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. திருடர்கள் அதிகரித்துவிட்டதால், வீட்டைவிட்டு வெளியேறும் போதுமட்டுமன்றி, வீட்டிலிருக்கும் போதும் கவனமாகவும் அவதானமாகவும் இருக்கவேண்டும்.

நாடு முழுமையாக திறக்கப்பட்டாலும் பொது வைபவங்கள், திருமணங்கள் உள்ளிட்டவற்றை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்படாது என அரசாங்கம் அறிவித்துள்ளமையால், தேவையில்லாத வகையில் ஆபரணங்களை அணிந்துகொண்டு செல்லவேண்டிய தேவையிருக்காது. இருப்பதைத் தக்கவைத்துக்கொண்டு, பாதுகாப்பதே புத்திசாலித்தனமாகும்.

அதேபோல, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோரும் கவனமாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும். பொதுமுடக்கத்துக்கு முந்திய காலங்களில், பலரும் பணப்பை, அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருட்களைப் பறிகொடுத்திருக்கக்கூடும். இனி, பொதுப் போக்குவரத்தில் இடம்பெறும் களவுகளும் அதிகரிக்கலாம். ஆகையால், எப்பொழுதும் விழிப்பாக இருப்பதே, சகலருக்கும் சகலத்துக்கும் நலம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு


## எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நடத்தை கெட்டவர்களுக்கும் கொடூர குணம் கொண்டவர்களுக்கும் இரக்கம் வரலாம். திரைப்படங்கள், சின்னத்திரை நாடகங்களில் கதாநாயகி, கதாநாயகன் போன்றோருக்கு வரும் துன்பங்ளைப் பார்த்து, கெட்ட நபர்கள்கூட, மனம் நெகிழ்ந்து கண்ணீர் சிந்துவதுண்டு.

ஆயினும், இவர்கள் வெளியில் வந்தால், பழைய மனிதனாகி விடுகின்றார்கள். பிறவிக் குணத்தை, இயல்பான நடத்தைகளை மாற்றமுடியாது என்பார்கள்.

ஒருசிலர், வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளும் அனுபவங்களைப் படிப்பினையாகக் கொண்டு, தமது கெட்ட குணங்களைக் கைவிட்டு, திருந்தி, வாழ்க்கையில் நல்லவராகவும் வரலாம். மனச்சாட்சி இயங்கும்போது, நெஞ்சத்தில் உறுத்துதல் வந்தே தீரும்.

உயிர்களின் மீது நிரந்தரமான இரக்கம், ஈகை தானாகவே சுரத்தல் வேண்டும். தங்களைச் சுற்றியிருக்கும் நல்லமனிதர்கள் ஊடாகவும் மனிதர்கள் தங்களைச் செதுக்கிக் கொள்வதுண்டு.

துஷ்டர்களாக வாழ்ந்தவர்கள், முதுமை வந்தபின்னர், தங்களை நல்லவர்களாக மாற்றி அமைப்பது, காலம் கடந்த ஞானம் ஆகும். இளமையில் ஒழுக்கம் முக்கியம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# 'காட்போட்' வீரர்கள்

**மொஹமட் பாதுஷா**

'தாய் கூட, அழுகின்ற பிள்ளைக்குத் தானே, பசி என்று பரிவோடு பாலூட்ட வருவாள். உன் வீட்டுக் கண்ணாடி ஆனாலும் கூட, முன்வந்து நின்றால் தான் முகம் காட்டும். இங்கே, மனதுக்குள் பல கோடி நினைவுகள் இருந்தாலும், உதடுகள் திறந்தால் தான் உதவிகள் பெறக்கூடும்....' இது திரைப்பாடல் ஒன்றுக்காக, வாலி எழுதிய வரிகளாகும்.

இதைத்தான், 'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என்று, நமக்கு பாலர் வகுப்பில் இருந்தே சொல்லித் தந்திருக்கின்றார்கள். ஆனால், இன்னும் அரசியலில் 'பால்குடி மறவாத' பிள்ளைகளைப் போல, சிறுபிள்ளைத்தனமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள், தமக்குத் தேவை எனும் போது மட்டும் அழுது ஆர்ப்பரித்து, அவசியமானவற்றைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இருப்பினும், சமூகத்தின் தேவைகளுக்காகக் குரல்கொடுக்காமல், அவை எல்லாம் தானாகக் கிடைக்கும் என்ற தோரணையில் வாழாவிருக்கின்றனர்.

தேர்தல் காலத்தில், மக்களிடம் வாக்குக் கேட்டு வருகின்றார்கள். பதவி தேவையான போது, அதற்காக அழுத்தங்களைக் கொடுக்கின்றார்கள். அமைச்சு, பிரதியமைச்சு பதவிகளை பெறுவதற்காக ஆலாய்ப் பறக்கின்றார்கள். வாகனம், நிதி தேவையாகின்ற போது, அவற்றைப் பெறவும் சூட்சுமமாகச் செயற்படுகின்றார்கள்.

ஆனால், முஸ்லிம் மக்களின் தேவைக்காக, பிரச்சினைகளுக்காக, அபிலாஷைகளுக்காகப் பேசுவதற்கு மட்டும் பின்வாங்குகின்றார்கள். முஸ்லிம் அரசியல் பரப்பில், மூன்றுக்கும் குறைவான அரசியல்வாதிகளே கொஞ்சமாவது சமூகப் பிரச்சினைகளுக்காக பேசுகின்றார்கள். மீதமுள்ளோர் அரசியல் ஜடங்களைப் போலவோ, யாரோ ஆட்டுவிக்கும் பொம்மைகளைப் போலவோ காலத்தை வீணடித்து விட்டுப் போகின்றார்கள்.

இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்ற போது, அவர்கள் ஒரு 'ரெடிமேட்' பதிலை எப்போதும் சொல்வதுண்டு. அதாவது, "நாங்கள் பேசாமல் இல்லை; பேச வேண்டிய இடத்தில் இரகசியமாகப் பேசிக் கொண்டே இருக்கின்றோம்" என்பார்கள். அல்லது, "பேசுவதற்கான உரிய நேரம் வரும்வரை காத்திருக்கின்றோம்" என்பார்கள்.

ஆனால், அவ்வாறு இரகசியமான காய் நகர்த்தல்களை மேற்கொண்டு, முஸ்லிம் கட்சித் தலைவர்களும் முஸ்லிம் எம்.பிக்களும் பெற்றுக் கொடுத்த உரிமைகள், வென்றெடுத்த அபிலாஷைகளைப் பட்டியலிட்டுச் சொல்லுங்கள் என்று கேட்டால், அந்தக் கேள்வியே விளங்காத மாதிரி, மறுபக்கம் திரும்பிக் கொள்வதையே தொடர்ச்சியாகக் காண்கின்றோம்.

முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் பேசாமடந்தைகளாக இருந்தமையால், முஸ்லிம் சமூகம் நிறையவற்றை இழந்திருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தின் நீண்டகால அடிப்படைப் பிரச்சினைகள், இன்னும் தீர்க்கப்படாதிருக்கின்ற பின்னணியில், அண்மைக்காலமாகப் புதுப்புது பிரச்சினைகள், நெருக்கடிகள் உருவெடுத்துக் கொண்டிருப்பதையும் காணலாம்.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு இலட்சக்கணக்கான ஏக்கர் காணிப் பிரச்சினைகள் உள்ளன. இன ரீதியான விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுவதில் பாராமுகம் உள்ளது. வடக்கு, கிழக்குக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களின் இருப்பும் வாழ்வும் சார்ந்த சிக்கல்கள் உள்ளன. இவையெல்லாம் இன்னும் தீர்க்கப்படவில்லை.

ஆயுதக் குழுக்களாலும் இனவாதக் கும்பல்களாலும் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பலியெடுப்புகளுக்கு நீதி கிடைக்கவில்லை. நிகழ்த்தப்பட்ட உரிமை மீறல்கள், குறைந்தபட்சம் முஸ்லிம் அரசியல்வாதிகளால் ஆவணப்படுத்தப்படவோ, பொதுவெளியில் முன்வைக்கப்படவோ இல்லை.

இப்போது அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றியும் தேர்தல் முறைமை மீளாய்வு பற்றியும் பேசப்படுகின்றது. ஆனால், முஸ்லிம் கட்சிகளும் எம்.பிக்களும் கூட்டாகச் சந்தித்து, இதுபோன்ற விடயங்களைக் கலந்து பேசி, ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வருவதற்கு, காத்திரமான நடவடிக்கைகளை எடுத்ததாகத் தெரியவில்லை.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில், ஆரம்பத்தில் இருந்தே கவனம் செலுத்தாமல் உறக்கத்தில் இருந்து விட்டு, கடைசிக் கட்டத்தில் தலையில் அடித்துக் கொண்டு ஓடிவந்து, "முஸ்லிம்களுக்கும் பங்கு வேண்டும்", "முஸ்லிம்களின் நிலைப்பாடு இதுதான்" என்று கூற முற்பட்டமையால், முஸ்லிம் சமூகத்துக்குக் கிடைக்க வேண்டிய பல அனுகூலங்கள், கடந்த காலத்தில் கிடைக்காமல் போன அனுபவங்கள் ஏராளம் உள்ளன.

இவ்வாறான விடயங்களில், முஸ்லிம்களின் அபிலாஷைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஒருபுறமிருக்க, முஸ்லிம் சமூகத்தின் அடிப்படை இன, மத அடையாளமும் தனித்துவமும் கேலிக்கு உள்ளாக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அதற்கான விளக்கத்தை வழங்குவதற்குக் கூட, முஸ்லிம் எம்.பிக்கள் ஆகக் குறைந்தபட்ச முனைப்பையும் வெளிக்காட்டாத போக்கும் அவதானிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை ஒரு பல்லின நாடென்ற அடிப்படையில், ஏனைய இனங்களைப் போலவே முஸ்லிம்களும் பல விடயங்களில் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அரபு தேசங்களைப் போல, இங்கு செயற்படுவது நடைமுறைச் சாத்தியமற்றது. ஆயினும், இலங்கையில் அதையும் தாண்டிய மிதமிஞ்சிய ஒடுக்குமுறை, முஸ்லிம்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றமை கண்கூடு.

ஏற்கெனவே, ஹலால் சான்றிதழ், ஹபாயா போன்ற பல விடயங்கள், சிதைக்கப்பட்டு விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலின் பின்னர், முஸ்லிம்கள் உளவியல் ரீதியாகப் பலவீனப்பட்டிருந்த சூழலில், இஸ்லாமிய சமயத்துடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து இனவாதிகள், முஸ்லிம்களுக்கே அறிவுரை கூறும் பாங்கில் செயற்படுவதைக் காண முடிகின்றது.

இந்நிலையில், தனியார் சட்டத்தின் பிரதான கூறாகத் திகழ்கின்ற காதி நீதிமன்றங்களை, முழுமையாக இல்லாதொழிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட எம்.பியும் ஒரேயொரு முஸ்லிம் அமைச்சருமான நீதியமைச்சரின் மூலம், அரசாங்கம் இந்த அறிவிப்பைச் செய்துள்ளது.

முன்னதாக, முஸ்லிம் தனியார் சட்ட மறுசீரமைப்புத் தொடர்பில், ஓய்வுநிலை நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையிலான குழு, 10 வருடங்கள் ஆராய்ந்து அறிக்கையை கையளித்தது. இதனுடன் முரண்பட்டுக் கொண்டு, உலமா சபை சார்ந்த குழு, இன்னுமோர் அறிக்கையைச் சமர்ப்பித்தது. பின்னர், நீதியமைச்சரான அலிசப்ரியும் ஒரு குழுவை நியமித்திருந்தார்.

தனியார் சட்டத்தின் கீழ்வரும் பல விடயங்களில், காலத்துக்கேற்ற மாற்றத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே, முஸ்லிம்களின் நிலைப்பாடாகும். அதனடிப்படையில், இச்சட்டத்தில் பல ஏற்பாடுகளைத் திருத்துவதற்கான பொதுவான இணக்கப்பாடு காணப்படுகின்றது. அந்த விடயங்களைத் திருத்துவதை விட்டு விட்டு, ஒட்டுமொத்தமாக காதி நீதிமன்ற முறைமையை வலிதாக்குவதில், ஆட்சியாளர்கள் முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளனர்.

முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான நிலைமையை, இன்னுமொரு வகையிலும் நோக்கலாம். அதாவது, முஸ்லிம்களுடன் தொடர்புபட்ட விடயங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்பு, சமூகத்தின் உரிமைகள், அபிலாஷைகள், அரசியல் அணுகுமுறை என்பன தொடர்பில், முஸ்லிம் அரசியல்வாதிகள், அங்கிகரிக்கப்பட்ட மத கட்டமைப்புகள், தமது கடமையைச் சரிவரச் செய்யத் தவறியதன் விளைவாக, இன்று வெளியில் இருந்து அவை திணிக்கப்படுகின்ற நிலை தோன்றியுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இவ்வாறான நெருக்குவாரங்கள் குறித்து, இன்னும் பெரும்பாலான முஸ்லிம் அரசியல்வாதிகள் வாய் திறக்கவில்லை. செயல்வீரர்களாக அன்றி, 'காட்போட்' வீரர்களாகவே அவர்கள் தெரிகின்றனர்.

அண்மையில், ஒரு பௌத்த துறவி கூறிய கருத்துகள், முஸ்லிம் சமூகத்துக்குள் பெரும் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், "சமூகத்துக்காக உயிரைக்கூட கொடுப்போம்" என்று வாய்ச்சொல்லில் வீராப்புக் காட்டுகின்ற முஸ்லிம் எம்.பிக்கள், 'இதுபற்றிப் பேசினால் இனவாதம் தூண்டப்பட்டு விடும்' என்ற காரணத்தின் அடிப்படையில், தமது எதிர்ப்பை நாடாளுமன்றத்தில் கூட வெளிப்படுத்தாமல் இருக்கின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில், சகோதர சமூகத்தைச் சேர்ந்த எம்.பி உரையாற்றுவது, கணிசமான முஸ்லிம் மக்களுக்கு, ஓர் ஆறுதலாக அமைகின்றது. இருப்பினும், முஸ்லிம் எம்.பிக்கள், 'நாங்களும் பேச மாட்டோம்; நீங்களும் பேசக் கூடாது' என்ற மனநிலையில் இருப்பது போலவே, அவர்களது எதிர்வினைகள் உணர்த்துகின்றன.

"இந்த ஆட்சியில், நாடாளுமன்றத்தில் பேசி என்ன நடக்கப் போகின்றது"? என்று முஸ்லிம் எம்.பிக்கள் சொல்வது நமக்குக் கேட்கின்றது. ஆனால், அப்படியென்றால் விமர்சனங்கள் வலுப்பெறத் தொடங்கிய பிறகு, முறைப்பாடு செய்வதும் முரண்நகையாகத் தெரியவில்லையா?

நிலைமைகளைக் கவனமாகக் கையாள வேண்டும். அந்தவகையில், முஸ்லிம் சமூகத்தை உரசிச் சூடாக்க முற்படுகின்ற இனவாதிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும், சாதகமான களச்சூழலை மறைமுகமாக உருவாக்காத வகையில், நிலைமைகளைக் கவனமாகக் கையாள வேண்டும்.

அந்த வகையில், முஸ்லிம் சமூகத்தை உரசிச் சூடாக்க முற்படுகின்ற இனவாதிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும், மறைமுகமாக சாதகமான களச்சூழலை ஏற்படுத்தக் கூடாது என்பதை ஏற்றுக் கொள்ளவே வேண்டும். அப்படியானால், மாற்றுவழிகளில் காய்களை நகர்த்துவது அவசியம்.

அதுபோல, எல்லாக் காலமும் எல்லா விவகாரங்களுக்கும் எதிராகப் பேசிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவ்வாறு, முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால், பேச வேண்டிய விடயத்தை, பேச வேண்டிய இடத்தில், பேச வேண்டிய நபருடன் பொருத்தமான விதத்தில், பேசியே ஆக வேண்டும்.

## கடிதங்கள்

### பத்தினிபுரத்தில் யானைகளின் தொடர் தாக்குதல்



திருகோணமலை மாவட்டம், பாலம்போட்டாறு பகுதியில் உள்ள பத்தினிபுர கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை (26) இரவு நுழைந்த காட்டு யானையால், பலத்த சேதங்கள் விளைவிக்கப்பட்டு உள்ளதாக, அப்பகுதி குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவில் குடியிருப்பு காணிக்குள் நுழைந்த காட்டு யானை, தென்னை, வாழை உள்ளிட்ட பயிரினங்களை துவம்சம் செய்துள்ளதுடன், வேலியையும் நாசமாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தென்னை மரத்தை அடியோடு பிடுங்கி, துவம்சம் செய்துள்ளதாகவும் தோட்டச் செய்கையை நம்பியே வாழ்க்கையைக் கொண்டு செல்லும் இவர்களின் வாழ்வாதாரம், இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரங்களில் நிம்மதியாகத் தூங்க முடியாத அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பல முறை சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு இது தொடர்பில் முறைப்பாடு செய்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் பத்தினிபுர கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

எனவே, கிராம மக்களையும் அவர்களது வாழ்வாதாரங்களையும் பாதுகாக்கும் பொருட்டு, பாதுகாப்பான மின்சார யானை வேலியை அமைத்து, யானைகளின் தொல்லைகளில் இருந்து பாதுகாக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

–ஹஸ்பர் ஏ ஹலீம்

### மோடியின் அமெரிக்க விஜயம்:

# இந்தியாவை வளமாக்க வழிவகுக்குமா?



அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நடைபெற்ற முதலாவது 'குவேட்' கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விடுத்த அழைப்பை ஏற்று, பிரதமர் நரேந்திர மோடி தனது அவுஸ்திரேலிய, ஜப்பானிய சகாக்களுடன் அம்மாநாட்டில் கலந்துகொண்டார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பொறுப்பேற்ற பிறகு, நரேந்திர மோடி முதன்முறையாக அவரைச் சந்தித்ததால், மோடியின் இந்த விஜயம் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. இம்மாநாடு பற்றி பைடன் கூறுகையில், "நான்கு ஜனநாயக நாடுகளின் இந்தக் குழு, உலக நன்மைக்கான சக்தியாகச் செயற்படும். இந்தோ பசிபிக் மற்றும் முழு உலகிலும் அமைதியையும் செழிப்பையும் உறுதிசெய்யும்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக, இருதரப்பின் முதல் சந்திப்பு, வெள்ளை மாளிகையில் இடம்பெற்றபோது, உலகின் மிகப்பெரிய இரண்டு ஜனநாயக நாடுகளான இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு வலுவானதாகவும் இறுக்கமானதாகவும் நெருக்கமானதாகவும் இருக்கவேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதி கூறினார்.

பிரதமர் மோடி, இச் சந்திப்புபற்றி விவரிக்கையில், "இந்த நூற்றாண்டின் மூன்றாவது தசாப்த ஆரம்பத்தில், பைடனுடன் நடத்தும் இந்த இருதரப்பு சந்திப்பு முக்கியமானது" என்று கூறினார். மேலும், "ஜனாதிபதி ஜோ பைடன், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தலைமையில், அமெரிக்க-இந்திய இருதரப்பு உறவு, இன்னும் பல உச்சங்களைத் தொடும் என்று நம்புகிறேன். இரு நாட்டு மக்களின் ஒற்றுமைதான், இரு நாடுகளுக்கு இடையே ஒரு பாலமாக இருக்கிறது. கொரோனா காலகட்டத்தில், அமெரிக்கா, இந்தியாவுக்குச் செய்த உதவிகள் மறக்க முடியாதவை. இரு நாட்டு உறவும் தொடர்ந்து, மேம்படப் பாடுபடுவோம்" என்றார்.

### இணைந்து செயற்பட 'குவேட்' தலைவர்கள் உறுதிமொழி

இந்தோ - பசிபிக் மற்றும் உலகெங்கிலும் அமைதியையும் செல்வச்செழிப்பையும் ஏற்படுத்துவதற்கு, இணைந்து செயற்படப்போவதாக இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்கள் உறுதிமொழி கூறினர்.


வெள்ளை மாளிகையின் கிழக்கு அறையில் இடம்பெற்ற 'குவேட்' ஒன்றுகூடலில், பைடனால் உரையாற்றுவதற்கு முதலில் அழைக்கப்பட்ட தலைவர் என்னும் பெருமையும் மோடிக்குக் கிடைத்தது. முன்னதாக மோடியுடனான ஒரு மணித்தியாலத்துக்கும் மேற்பட்ட சந்திப்பின்போது, மோடியை "எனது நண்பர்" என்று கூறி, பைடன் பெருமிதமடைந்தார்.

ஏனைய நாடுகள் மீது தாக்குதல் தொடுக்கும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு, பாகிஸ்தான், தனது நாட்டிலிருந்து இடமளிக்காது என்பதை உறுதிபடத் தெரிவிக்க வேண்டும் எனவும், மும்பை பயங்கரவாதத் தாக்குதல், பதான்கோட் தாக்குதல், இந்திய எல்லையை அத்துமீறும் தாக்குதல் போன்றவற்றை நடத்தும் தீவிரவாதக் குழுக்களை, பாகிஸ்தான் நீதியின் முன் நிறுத்த வேண்டும் என இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

இரு தலைவர்களும் சந்தித்த போது, உரையாடிக்கொண்ட முக்கிய விடயம், பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு துணைபோகக் கூடாது என்பதும் இரு நாட்டுக்குமான வர்த்தகத் தொடர்புகளை அதிகரிக்க வேண்டும் என்பதுமாகும்.

இந்தியாவின் கிழக்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் பாகிஸ்தானை வளர்த்துவிடும் தீவிரவாத அமைப்புகளின் தாக்குதலாலும், பாகிஸ்தானின் இராணுவ நடவடிக்கையாலும் அதிக ஆபத்தை எதிர்நோக்கி வருகிறது. இதனால் பாகிஸ்தானின் உறுதிப்பாடு இராணுவ, பொருளாதார வளர்ச்சி என்பன, இந்தியாவைப் பாதிக்கும் விடயமாக உள்ளது.

பாகிஸ்தானின் இராணுவ வளர்ச்சியானது, இந்தியாவின் இருப்பை ஆபத்துக்கு உள்ளாக்கிவிடுமென, இந்தியத் தரப்பு



அச்சமடைந்துள்ளது.

பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவானது, மிக உயர்ந்த நிலையில் உள்ளது. அணுவாயுதப் பரிசோதனையிலிருந்து குவாடர் துறைமுகம் அமைப்பதற்கான நிதி உதவி வரை, பாகிஸ்தானுடன் சீனா நெருக்கமடைந்துள்ளது.

கொரகொராம் உயர்பாதை, 1,300 கி.மீ நீளமுடைய சீன - பாகிஸ்தான் வர்த்தகப் பாதையாக உள்ளது. இதனூடாக இரு நாட்டுக்குமான வர்த்தக உறவு மட்டுமன்றி, மேற்காசியாவில் கொள்வனவு செய்யும் எண்ணெயை பாகிஸ்தானூடாகப் பரிமாற்றிக் கொள்ளவும் முடியும்.

பாகிஸ்தானின் அணுவாயுதத் தொழில்நுட்பம், தீவிரவாதத்திடம் சென்றுவிட்டால், அதனால் ஏற்படும் பாதிப்பு இந்தியாவுக்கானது என்றே இந்தியா கருதுகிறது. மேலும், இந்தியா - பாகிஸ்தான் எல்லையில், நிகழ்ந்து வரும் இரு தரப்பு இராணுவத்தின் தாக்குதல்களும் இந்தியாவுக்கு அதிகமான பாதிப்பினை ஏற்படுத்தி வருகிறது. இதனால் எதிர்காலத்தில் ஒரு யுத்தத்துக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதை எப்படி எதிர்கொள்வதென இந்தியத் தரப்பு கருதுகிறது. அத்தகைய யுத்தம் ஒன்று சாத்தியப்படாமல் இருப்பதற்கு, இந்திய-அமெரிக்க நட்பு உதவக்கூடியதாக அமையும்.

எனவே, பிரதமர் மோடியின் அமெரிக்க பயணம், பிராந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அதிகமான எதிர்பார்ப்பைத் தந்துள்ளது. இந்தியாவின் பிரசன்னம், அமெரிக்காவின் பக்கம் இருப்பது, சீனாவின் சர்வதேச மட்ட வலுவை பாதிப்படையச் செய்யவுள்ளது. பாகிஸ்தானை இலக்கு வைப்பதென்பது சீனாவையும் நெருக்கடிக்கு உள்ளாக்கும்.

நரேந்திர மோடி, டிஜிட்டல் இந்தியா திட்ட மேம்பாடு, கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பங்கள், பல்வேறு துறைகள் ரீதியான ஆராய்ச்சிகள் குறித்து, பல நிறுவனத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார். தலைமை நிர்வாக அதிகாரிகளைச் சந்தித்து, முதலீடுகள் குறித்து விரிவான ஆலோசனையும் நடத்தினார்.

'குவால்காம்' நிறுவனத் தலைவர் கிறிஸ்டியானோ ஆர். அமோனை பிரதமர் மோடி சந்தித்தபோது, இந்தியாவில் 5-ஜி, டிஜிட்டல் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது தொடர்பாக, குவால்காம் தலைவர் விருப்பம் தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மோடியுடனான சந்திப்பு குறித்து ட்விட்டரில் கருத்து தெரிவித்துள்ள ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனத் தலைமைச் செயல் அதிகாரி மார்க் விட்மார், 'தொழிற்றுறை கொள்கைக்கும் வர்த்தகக் கொள்கைக்கும் இடையே ஒரு வலுவான சமநிலையை உருவாக்க, பிரதமர் மோடி என்ன செய்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இது இந்தியாவில் ஃபர்ஸ்ட் சோலார் போன்ற நிறுவனங்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைகிறது' என்று பதிவிட்டிருக்கிறார்.

ஜெனரல் அடாமிக்ஸ் நிறுவனத் தலைமைச் செயல் அதிகாரி விவேக் லால், "இது ஒரு சிறந்த சந்திப்பு. தொழில்நுட்பம், இந்தியாவில் வரும் கொள்கைச் சீர்திருத்தங்கள் மீதான நம்பிக்கை, முதலீட்டுக் கண்ணோட்டத்தில் இந்தியாவிடம் உள்ள சிறந்த சாத்தியக்கூறுகள் என்பன பற்றிக் கலந்தாலோசித்தோம்" என்று தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க நிறுவனங்களின் நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர், நரேந்திர மோடி இந்திய வம்சாவளியான அமெரிக்கத் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸைச் சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து, இருவரும் கூட்டாகச் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, "இந்தியாவும் அமெரிக்காவும் எப்போதுமே பங்காளிகள்தான். இரு நாடுகளுக்கும் பல்வேறு விஷயங்களில் ஒற்றுமை இருக்கிறது. இந்தியாவும் அமெரிக்காவும் மிகப்பெரிய, மிகப் பழைமையான ஜனநாயக நாடுகள். இரு நாடுகளும் மதிப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன. அமெரிக்காவுடனான இந்தியாவின் ஒற்றுமை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது" என்று கூறினார்.

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் பேசுகையில், "அமெரிக்காவுக்கு விரைவில் தடுப்பூசி ஏற்றுமதி தொடங்கப்படும் என்ற இந்தியாவின் அறிவிப்பை வரவேற்கிறேன். இந்தியா இந்த இக்கட்டான சூழலில், நாள் ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி பேருக்குத் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்டிருப்பது வியப்பாக இருக்கிறது. இந்தியாவில் கொரோனா பரவல் மிகுதியாக இருந்த நேரத்தில், அதன் தேவையை உணர்ந்து நாங்கள் செயற்பட்டது எங்களுக்குப் பெருமிதமாக இருக்கிறது. இந்தியா, இந்தத் தடுப்பூசி உற்பத்தி, ஏற்றுமதியில் மற்ற உலக நாடுகளுக்கு முன்னோடியாக இருக்கிறது. நோய்த்தொற்றின் ஆரம்பகட்டத்தில் இந்தியா, உலக நாடுகள் பலவற்றுக்குத் தடுப்பூசி வழங்கி உதவியது. இந்தியா பருவநிலை நெருக்கடியைத் தீவிரமாக கவனத்தில் கொண்டிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயற்படுவதன் மூலம், இந்த நெருக்கடிகளிலிருந்து நம் நாட்டு மக்களைக் காப்பது மட்டுமின்றி, உலக அளவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்றார்

பிரதமர் மோடியின் இந்த அமெரிக்கப் பயணம், பிராந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அதிகமான எதிர்பார்ப்பைத் தந்துள்ளது. இந்தியாவின் பிரசன்னம், அமெரிக்காவின் பக்கம் இருப்பது, சீனாவின் சர்வதேச மட்ட வலுவை பாதிப்படையச் செய்யவுள்ளது. பாகிஸ்தானை இலக்கு வைப்பதென்பது, சீனாவையும் நெருக்கடிக்குள்ளாக்கும் என்று கருதப்படுகிறது.

கமலா ஹாரிஸுடனான சந்திப்பைத் தொடர்ந்து, நரேந்திர மோடி, 'குவேட்' மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, அமெரிக்கா வந்திருந்த ஜப்பான் பிரதமர் யோஷிஹைடே சுஹாவைச் சந்தித்துப் பேசினார். இரு நாடுகளின் தலைவர்களின் சந்திப்புக் குறித்துத் தகவல் வெளியிட்டிருக்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், ஜப்பான் பிரதமருடனான இந்தியப் பிரதமரின் சந்திப்பின்போது, இந்தோ-பசிபிக் பிராந்திய வளர்ச்சி, விநியோகச் சங்கிலி பின்னடைவு, வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறது.

---

சென்னை

### நீட், டாஸ்மாக்குக்கு எதிராகப் போராடியோர் மீதான

# வழக்குகளை மீளப்பெற உத்தரவிட்டார் ஸ்டாலின்

கடந்த ஆட்சியில் அறவழியில் போராடிய மக்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட 868 வழக்குகளை மீளப் பெற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நேற்று (27) உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது;

கடந்த 24.6.2021 அன்று சட்டப்பேரவையில், ஆளுநர் உரையின் மீதான விவாதத்துக்கு அளித்த பதிலுரையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "கடந்த ஆட்சியில், கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக ஊடகங்கள் மீது அரசு தொடர்ந்த வழக்குகள், மத்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள் மீதான வழக்குகள், குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராகப் போராடியவர்கள் மீதான வழக்குகள், மெதேன் - நியூட்ரினோ - கூடங்குளம் அணு உலை - சேலம் எட்டு வழிச்சாலை



ஆகிய திட்டங்களுக்கு எதிராக அறவழியில் போராடிய மக்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்" என்று அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினைச் செயற்படுத்தும் விதமாக, 5,570 வழக்குகள் ஏற்கெனவே திரும்பப் பெறப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, கடந்த 13.9.2021 அன்று பொலிஸ் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்துக்கு பதிலளித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில், 'நீட் தேர்வு மற்றும் டாஸ்மாக் மதுக்கடைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது, முந்தைய அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும்' எனவும் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினையும் செயற்படுத்தும் வகையில், நீட் தேர்வுக்கு எதிராக அறவழியில் போராடியவர்கள் மீது பதியப்பட்ட 446 வழக்குகளும், டாஸ்மாக் மதுக்கடைகளுக்கு எதிராகப் போராடியவர்கள் மீது பதியப்பட்ட 422 வழக்குகளுமாக மொத்தம் 868 வழக்குகளைத் திரும்பப் பெறவும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆணையிட்டுள்ளார் என்று தமிழக அரசு செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

---

புதுடெல்லி



### மத்திய அரசைக் கண்டித்து விவசாயிகள் போராட்டம்:

# போக்குவரத்து நெரிசலால் ஸ்தம்பித்தது புதுடெல்லி

வேளாண் சட்டங்களுக்கு எதிராகவும், வேளாண் சட்டங்கள் இயற்றப்பட்டு ஓராண்டு நிறைவை முன்னிட்டும் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நாடு முழுவதும் பாரத் பந்த்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

விவசாயிகள் நடத்தும் இந்த பாரத் பந்த்துக்கு பா.ஜ.க ஆளாத மற்ற மாநிலங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. பல்வேறு மாநிலங்களில் விவசாயிகள் நடத்தும் பாரத் பந்த்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

விவசாயிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பான 'சம்யுக்த் கிசான் மோர்ச்சா' சார்பில் நடத்தப்படும் இந்தப் பந்தால் பெரும்பாலான மாநிலங்களில், மக்களின் இயல்பு வாழ்க்கையில் எந்தவிதமான சிக்கலும் இல்லை. புதுடெல்லி, உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் சில நகரங்களில் மட்டும் ரயில் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

புதுடெல்லி, உத்தர பிரதேச மாநிலத்தை இணைக்கும் நெடுஞ்சாலைகள், எக்ஸ்பிரஸ் சாலைகளிலும் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கேரளாவில் பெரும்பாலான தொழிற்சங்கங்கள் பாரத் பந்துக்கு ஆதரவளித்து உள்ளதால், பொதுப்போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இந்த பாரத் பந்த் நடக்கும்போது, அனைத்து அரசு அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், கடைகள், தொழிற்சாலைகள், வர்த்தக அமைப்புகள் மூடப்படும். பொது நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் ரத்து செய்யப்படும் என்று சம்யுக்தா கிசான் மோர்ச்சா தெரிவித்திருந்தது.

---

லடாக்

### இந்திய இராணுவ அதிகாரி

# புதிய கின்னஸ் உலக சாதனை

### 472 கி.மீற்றரை 34 மணிநேரத்தில் கடந்தார்



இந்திய இராணுவ அதிகாரி ஸ்ரீராம், யூனியன் பிரதேசமான லடாக்கின் லே மாவட்டத்தில் இருந்து, இமாச்சல பிரதேசத்திலுள்ள மணாலி வரை உள்ள 472 கிலோமீற்றர் தூரத்தை, 34 மணிநேரம் 54 நிமிடங்களில் கடந்து 'வேகமாக தனி சைக்கிள் ஓட்டுதல் (ஆண்கள்)' பிரிவில் புதிய கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார் என்று பாதுகாப்பு செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

கடினமான வானிலை சூழலில், சனிக்கிழமை (25) அதிகாலை 4 மணிக்கு தனது பயணத்தை ஆரம்பித்த அவர், ஐந்து முக்கிய நிலைகளை கடந்து முன்னேறி, 34 மணிநேரம் 54 நிமிடங்களில் இலக்கை வெற்றிகரமாக முடித்துள்ளார். இந்த நிகழ்வு 'ஸ்வர்ணிம் விஜய் வர்ஷ்' கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகும் என்றும் 195ஆவது கன்னர் தினத்தை குறிக்கிறது என்றும் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றதன் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்தியா 'ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்' கொண்டாடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---

புதுடெல்லி

### டிஜிட்டல் சுகாதாரத் திட்டமான

# 'ஆயுஷ்மான் பாரத்' அங்குரார்ப்பணம்



தேசிய டிஜிட்டல் சுகாதார திட்டத்தை புதுடெல்லியில் இருந்து காணொலி மூலம் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். டிஜிட்டல் சுகாதார திட்டத்தின் மூலம், ஒவ்வொரு நபருக்கும் அடையாள அட்டை உருவாக்கப்பட்டு, உடல்நலம் குறித்த விவரங்கள் பாதுகாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஆயுஷ்மான் பாரத்' டிஜிட்டல் சுகாதாரத் திட்டத்தை பிரதமர் மோடி, தொடங்கி வைத்த பின்னர் தெரிவித்ததாவது:

'ஆயுஷ்மான் பாரத்' டிஜிட்டல் மிஷன், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் மருத்துவ சிகிச்சையில் உள்ள சிக்கல்களை நீக்குவதில் பெரும் பங்கு வகிக்கும்.


இன்று, நாட்டின் அனைத்து வைத்தியர்கள், தாதியர்கள், மருத்துவ பணியாளர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கொரோனா நோயாளிகளுக்கு தடுப்பூசி போடுவது அல்லது சிகிச்சை அளிப்பது, அவர்களின் முயற்சிகள் தேசத்திற்கு மிகப்பெரிய நிவாரணம் அளித்தது. கொரோனாவுக்கு எதிரான போராட்டத்துக்கு இது உதவியது" என்றார்.

---

கோழிக்கோடு

### நாய், பூனை வளர்க்க

# கட்டணம் நிர்ணயம்



கோழிக்கோடு மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நாய் வளர்ப்போர் ரூ.500, பூனை வளர்ப்போர் ரூ.100 கட்டணம் செலுத்தி அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் என்று அந்த மாநகராட்சி அறிவித்துள்ளது.

பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் கால்நடைகள் வளர்க்கவும், செல்லப் பிராணிகளை அழைத்துச் செல்லவும் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என கொச்சி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதனை விசாரித்த நீதிமன்றம், கேரளாவில் உள்ள அனைத்து செல்ல பிராணிகளையும் கால்நடைகளையும் மாநிலத்தில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகள் கணக்கெடுத்து, அவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்க வேண்டும் என்றும் செல்லப் பிராணிகள் வளர்ப்போர் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தது.

சுவிட்ஸர்லாந்து

# ஓரின திருமணம் செய்யலாம்

சுவிட்ஸர்லாந்தில் ஒரே பாலினத்தை சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சுவிட்ஸர்லாந்து பாராளுமன்றத்தில் ஒரினச்சேர்க்கையாளர்களுக்கு சார்பான தீர்மானமொன்று முன்வைக்கப்பட்டிருந்து.

குறித்த தீர்மானத்தில் ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம் எனவும், அவர்கள் விரும்பினால் குழந்தையொன்றைத் தத்தெடுத்து வளர்க்கலாம் என்றும், குறிப்பாகத் திருமணமான லெஸ்பியன் ஜோடிகளும் விந்து தானம் மூலம் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.



இந்நிலையில், நேற்று முன்தினம் இது குறித்து நடைபெற்ற வாக்கெடுப்பில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மையானோர்(6 4.1சதவீதமானோர்) குறித்த தீர்மானத்திற்குச் சார்பாக வாக்களித்தமையால் இதனை சட்டமாக்க சுவிட்சர்லாந்து பாராளுமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அந்தவகையில் ஒரே பாலினத்தை சேர்ந்தவர்களின் திருமணத்தை அங்கரித்த 30 ஆவது நாடாக சுவிட்ஸர்லாந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## விவாகரத்து விருந்து கொடுத்த பெண்




விவாகரத்தான பெண்ணொருவர் அதனை ஆடம்பரமாக விருந்து கொடுத்துக் கொண்டாடிய சம்பவம் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

பிரித்தானியாவில் வசித்து வரும் இந்தியப் பெண்மனியான சோனியா குப்தா (Sonia Gupta)என்பவரே தனது 17 வருடகால திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்தமையைக் கொண்டாடியுள்ளார்.

45 வயதான இவர் கடந்த 2003 ஆம் ஆண்டு திருமணம் செய்து பிரித்தானியாவில் குடியேறியுள்ளார். எனினும் அவரது திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் விவாகரத்துக் கோரி விண்ணப்பித்திருந்த அவரது வழக்கானது தற்போது முடிவுக்கு வந்துள்ளது.


இதனையடுத்து விவாகரத்துப் பெற்ற அவர் தனது மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு ஆடம்பர விருந்துபசாரமொன்றை அளித்துள்ளார்.

மேலும் அவ்விருந்தில், 'finally divorced' என்ற பொறிக்கப்பட்ட உடையை அணிந்து வலம் வந்தமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அவர் " தற்போது சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி

## முடிவுக்கு வரும் ஏஞ்சலா ஆட்சி?



ஜேர்மனியில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 25.9 சதவீத வாக்குகளைப் பெற்று சோஷியல் டெமாக்ரடிக் கட்சி முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

10 மாநிலங்களில் 799 தொகுதிகளுக்கு நடைபெற்ற இத்தேர்தலில் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலினின் யூனியன் ப்ளொக் கட்சி 24.1 சதவீத வாக்குகளைப் பெற்று 2 ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

இவ்விரண்டு கட்சிகளுக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றாலும், சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சியைக் கைப்பற்றுவது குறித்து ஆய்வு செய்து வருவதாக சோஷியல் டெமாக்ரடிக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் ஓலாஃப் ஸ்கோல்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் பிரதமராக கடந்த 16 வருடமாக ஏஞ்சலோ மெர்கல் இருந்தார் என்பதும் கடந்த 4 வருடம் கடுமையான அரசியல் எதிர்ப்புகளை சந்தித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## நடுங்கியது செவ்வாய்



அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசா 'செவ்வாய்க் கிரகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ள இன்சைட் லேண்டர்(Insight lander) என்னும் தானியங்கி விண்கலத்தை' அனுப்பியிருந்தது.

இந்நிலையில் செவ்வாய்க் கிரகத்தில் அண்மையில் பயங்கரமான நடுக்கம் ஏற்பட்டதை இந்த இன்சைட் லேண்டர் கண்டறிந்துள்ளது.

இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவில் 4.2 ஆக பதிவாகியுள்ளதாகவும் சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் நீடித்ததாகவும் இதன்போது இன்சைட் லேண்டர் 8,500 கிலோ மீற்றருக்கு அப்பால் இருந்ததுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்சைட் லேண்டரில் முதல் முறையாக மிக நீண்ட தொலைவிலிருந்து சக்தி வாய்ந்த நிலநடுக்கம் கண்டறியப்பட்டது நாசா விஞ்ஞானிகளிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ஒரே மாதத்தில் செவ்வாயில் ஏற்பட்ட 3 வது நிலநடுக்கம் இதுவே ஆகும். இதற்கு முன்னதாக கடந்த ஒகஸ்ட் 25 ஆம் திகதி அன்று இரண்டு நிலநடுக்கங்கள் 4.2 மற்றும் 4.1 என்ற ரிச்டர் அளவுகளில் பதிவானதாகவும் தற்போது ஏற்பட்ட நிலநடுக்கமானது கடந்த இரண்டை விட 5 மடங்கு ஆற்றல் மிக்கது என்றும் நாசா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்

## முகச்சவரம் செய்ய தடை

ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பினர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து கடுமையான சட்டங்களையும் தண்டனைகளையும் அமுல்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் முகச்சவரம் செய்யக்கூடாது என்று ஆப்கானிஸ்தானின் முடிதிருத்தும் கலைஞர்களுக்கு தலிபான்கள் உத்தரவிட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

முகச்சவரம் செய்வது இஸ்லாமிய சட்டங்களை மீறுவதாக அமைந்துள்ளது என்றும் இத் தடையை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஐ.பி.எல்:

# மும்பையை வீழ்த்திய பெங்களூர்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் மும்பை இந்தியன்ஸ் உடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

பெங்களூர்: 165/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிளென் மக்ஸ்வெல் 56 (37), விராட் கோலி 51 (42), ஸ்ரீகர் பாரத் 32 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 3/36 [4], ட்ரெண்ட் போல்ட் 1/17 [4], ராகுல் சஹர் 1/33 [4], குருனால் பாண்டியா 0/27 [4])

மும்பை: 111/10 (18.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 43 (28), குயின்டன் டி கொக் 24 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹர்ஷால் பட்டேல் 4/17 [3.1], யுஸ்வேந்திர சஹால் 3/11 [4], கிளென் மக்ஸ்வெல் 2/23 [4], மொஹமட் சிராஜ் 1/15 [3])


போட்டியின் நாயகன்: கிளென் மக்ஸ்வெல்




இப்போட்டியின் 17ஆவது ஓவரின் முதல் மூன்று பந்துகளில் ஹர்டிக் பாண்டியா, கெரான் பொலார்ட், ராகுல் சஹரை வீழ்த்தி ஹட்-ட்ரிக் விக்கெட்டுகளை ஹர்ஷால் பட்டேல் நிகழ்த்தியிருந்தார்.

இதேவேளை, மற்றொரு போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றிருந்தது.

இந்நிலையில், ஷார்ஜாவில் இன்றிரவு 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாமை வீழ்த்திய ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், ஆர்சனலின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டொட்டென்ஹாமுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக, எமிலி ஸ்மித் றோவே, பியர்-எம்ரிக் உபமெயாங், புகாயோ ஸாகா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை சண் ஹெயுங்க் மின் பெற்றிருந்தார்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## றோமாவை வென்ற லேஸியோ

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஸ்டேயோ ஒலிம்பிக்கோ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற றோமாவுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் லேஸியோ வென்றது.

லேஸியோ சார்பாக, சேர்ஜெய் மிலிங்கோவிச்-சவிச், பெட்ரோ, பிலிப்பே அன்டர்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். றோமா சார்பாக, இபனெஸ், ஜோர்டான் வெரெடௌட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



போர்மியுலா வண்:


## ஹமில்டனுக்கு 100ஆவது வெற்றி

போர்மியுலா வண்ணில் 100ஆவது வெற்றியை, ரஷ்ய குரான் பிறீயில் பிரித்தானியாவின் லூயிஸ் ஹமில்டன் நேற்றுப் பெற்றுக் கொண்டார்.

இப்பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த மக்லரென் அணியின் லான்டோ நொரிஸ் மழை பெய்த இறுதிச் சுற்றுக்களில் வழுக்கும் டயர்களில் தடுமாறிய நிலையிலேயே மெர்சிடீஸ் அணியின் ஹமில்டன் பந்தயத்தை வென்றிருந்தார்.

இதேவேளை, பந்தயத்தை 20ஆம் இடத்திலிருந்து ஆரம்பித்த றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பெராரி அணியின் கார்லோஸ் சைன்ஸ் மூன்றாமிடத்தைப் பெற்றிருந்தார்.

இப்பந்தய முடிவில் 246.5 புள்ளிகளுடன் இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் முதலாமிடத்தில் ஹமில்டன் உள்ளார். 244.5 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பனும், 151 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மெர்சிடீஸ் அணியின் வல்ட்டேரி போத்தாஸும் காணப்படுகின்றனர்.



டெஸ்ட் போட்டிகளிலிருந்து

## ஓய்வு பெற்ற மொயின் அலி

டெஸ்ட் போட்டிகளிலிருந்து இங்கிலாந்தின் சகலதுறைவீரர் மொயின் அலி ஓய்வு பெற்றுள்ளார்.

இதுவரையில் 64 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மொயின் அலி 2,914 ஓட்டங்களைப் பெற்றதுடன், 195 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தேர்வாளர் எட் ஸ்மித்தின் காலத்தில் டெஸ்ட் ஒப்பந்த வீரர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்த மொயின் அலி, அதன் பிறகு அண்மையிலேயே டெஸ்ட் போட்டிகளில் மீண்டும் விளையாடியிருந்தார்.

அறிமுகமானதிலிருந்து ஒன்றிலிருந்து ஒன்பதாம் இலக்க வீரர் வரையில் துடுப்பெடுத்தாடியிருந்த மொயின் அலி, அணியில் தனக்கு நிலையானதொரு இடம் வழங்கப்படவில்லை எனக் கூறியுள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 27 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.